பக்கங்கள்:22 விலை : 30/-

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 தை 01 வெள்ளிக்கிழமை 14.01.2022 கதிர் 70

# தமிழர்களுக்கு எதிரான சதியே 13ஆம் திருத்தம்

## அடித்துக் கூறுகின்றார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்



(கலையமுதன்)

யாழ்ப்பாணம், ஜனவரி 14

13 ஆம் திருத்தம் தமிழ் மக்களுக்கு உருவாக்கப்பட்ட சதி. அந்தச் சதியில் இருந்து முப்பது வருடங்களுக்கு மேலாக உயிர்த்தியாகம் செய்து ஏதோ ஒரு வகையில் தக்க வைத்துக் கொண்டு இருக்கின்றோம். இந்த சதியை நாங்கள் மக்களாலேயே முறியடிக்க வேண்டுமென தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

☞2

## இனி இது ரகசியம் அல்ல!

இன்றைய தைப்பொங்கல் தமிழ் அரசியல் தலைவர்கள் மத்தியில் நீதியரசர் விக்னேஸ்வரனுக்குத்தான் இரட்டிப்பு மகிழ்ச்சி தரும் என நினைக்கிறேன். அதற்குக் காரணம் உண்டு.

தைப்பொங்கல் என்றாலே நமக்கு முதலில்

பக்கம்02 »

வாசகர்கள்,
விளம்பரதாரர்கள்,
விநியோகஸ்தர்கள்,
முகவர்கள்
அனைவருக்கும்
'காலைக்கதிர்'
நாளிதழின்
இனிய
தைப்பொங்கல்
நல்வாழ்த்துக்கள்.

## இந்தியாவின் பாதுகாப்பை கட்டி எழுப்ப வடக்கு,கிழக்கின் அபிவிருத்தி முக்கியம்

### சிறிதரன் எம்.பி. கூறுகின்றார்



கொழும்பு,ஜன.14

இந்தியா தனது வெளியுறவுக் கொள்கையில் மாற்றத்தை ஏற்படுத்தி இலங்கையின் இனப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க வேண்டுமெனவும், வடக்கு கிழக்கை அபிவிருத்தி செய்வதன் மூலம் தான் இந்தியாவின் பாதுகாப்பும் எதிர்கால நலனும் கட்டியெழுப்பப்படும் எனவும் தமிழ்தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்

☞2

## டிராக்டர் பகுதி தென்பட்ட இடத்தில் அகழ்வுப் பணி!



(சண்முகம் தவசீலன்)

புதுமாத்தளன் கடற்கரையில் டிராக்டர் பாகங்கள் தென்பட்ட இடத்தில் நேற்று அகழ்வுப் பணி மேற்கொள்ளப்பட்டது.

முல்லைத்தீவு

☞2

## தமிழக மீனவர் 43 பேரினதும் மறியல் நீடிப்பு

இலங்கைக் கடற் படையினரால் கைது செய்யப்பட்ட இந்திய தமிழக மீனவர்கள் 43 பேரின் விளக்கமறியல் மேலும் இரண்டு வாரங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை நீதிமன்றில் இந்த வழக்கு நேற்று எடுக்கப்பட்ட போது இவர்களுக்கான விளக்கமறியலை ஜனவரி

☞2

## மாதகல் படகு விபத்தில் உயிரிழந்த மீனவருக்கு நீதி கோரி போராட்டம்

மாதகல் கடற்பரப்பில் இடம் பெற்ற படகு விபத்தில் உயிரிழந்த மீனவருக்கு நீதி கோரி நேற்றையதினம் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

மாதகல் கடற்பரப்பில் கடந்த 10ஆம் திகதி இரவு கடற்தொழிலுக்கு சென்ற மீனவரின்

☞2







## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நினைவுக்கு வருவது பொங்கல் பானைதான். அந்தப் பொங்கல் பானைக்கும் நீதியரசர் விக்னேஸ்வரனுக்கும் ஒரு தொடர்புண்டு. தாம் 2019 இல் புதிதாக ஆரம்பித்த தமிழ் மக்கள் கூட்டணிக்கு அவர் தேர்ந்தெடுத்த சின்னம் பொங்கல் பானைதான்.

எனினும், கடந்த பொதுத் தேர்தல் வரை அவரது புதிய அரசியல் கட்சிக்குத் தேர்தல்ஆணையத்தின்உத்தியோகபூர்வ அங்கீகாரம் கிடைக்கவில்லை. ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து, அந்தக் கட்சியின் மாற்றப்பட்ட பெயரில், மீன் சின்னத்திலேயே அவர் போட்டியிட்டு, ஒருவாறு வென்றார்.

இப்போது, இந்தத் தடவை பொங்கலுக்கு இரண்டொரு நாள் இருக்கையில் அவரின் கட்சிக்கு அங்கீகாரம் கிடைத்த இனிப்பான செய்தி அவருக்குக் கிட்டியது. அப்படியானால் அவரது பொங்கல் பானைச் சின்னத்துக்கும் அங்கீகாரம் கிடைத்து விட்டது.

அதனால் அவரைப் பொறுத்தவரை – அவரதுகட்சியினர், ஆதரவாளர்களைப் பொறுத்தவரை – இம்முறை, தைப்பொங்கல் சிறப்புப் பொங்கல்தான். அவர் தம் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்த மாதிரி பொங்கலோ பொங்கல்தான்!

★ ★ ★

ஆரியகுளத்தின் உரித்தை ஒட்டி வடக்கு மாகாண ஆளுநர் கிளப்பிய சந்தேகத்தை அடுத்து, பல சுவையான விடயங்கள் கட்டவிழத் தொடங்கியுள்ளன.

ஆரியகுளத்தின் உரித்தை அறிந்து கொள்வதற்காகப் பல ஆவணங்களைத் தோண்டத் தொடங்க, கிணறு வெட்டப் பூதம் கிளம்பிய – இல்லை, இல்லை, கிணறு மூட பூதம் கிளம்பிய – கதையாக புதுப்புது விடயங்கள் வெளிவரத் தொடங்கியிருக்கின்றன.

இப்போதெல்லாம், பொதுவான பல விடயங்களைச் சொல்வதற்கு நாம் நடிகர் வடிவேலுவின் நகைச் சுவையைத்தான் தேட வேண்டியுள்ளது. இதற்கும் அவர் தான் கைகொடுக்கின்றார்.

ஒருபடத்தில், பொலிஸ்நிலையத்துக்கு அரக்கப் பறக்க ஓடிவரும் வடிவேலு, அங்கு சத்தமிட்டவாறு புகார் செய்வார்.

"ஐயா! என் கிணற்றைக் காணேல்ல, என் கிணற்றைக் காணேல்ல...!" – என்று கோமிடுவார்.

"வட்டக் கிணறு ஸார், வட்டக் கிணறு ஸார்... அதுவும் வற்றாத கிணறு ஸார்... எண்பது அடி ஆழத்தில் இருந்தது ஸார்.... இங்குதான் படிக்கட்டு இருந்தது...." – என்று பொட்டல்வெளியில் வெறும்தரையைக்காட்டிபொலிஸாருக்கு வடிவேலு விட்ட கயிற்றில், அலப்பறை தாங்க முடியாது பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவரே தமது சீருடையைக் கழற்றிக் கொடுத்து விட்டு, 'அண்டவெயர்' உடன் வேலையை விட்டு நீங்கி, தேசாந்திரம் புறப்பட்டு விடுவார்.

இந்தக் காட்சி பலரினதும் மனதிலும் நிற்கும்.அங்கு கிணறு என்றால் இங்கு குளம் அல்ல, குளங்கள்.

ஆரியகுளத்தின் பழைய ஆவணங்களைத் தேடி, தோம்புகள், பதிவுகள், உறுதிகளைக் கிளறியவர்களின் கைகளில் பழைய Vesting Order (பாரதீனப்படுத்தல் கட்டளை) பற்றிய சில ஆவணங்கள் சிக்கின எனத் தெரிகின்றது. 1930 இற்கும் 1940 இற்கும் இடைப்பட்ட காலத்தவை அவை. அவற்றின்படி யாழ்.மாநகரத் துக்குள் – 'டவுண்' பிரதேசத்துக்குள் – மட்டும் அறுபது குளங்கள் வரை இப்படி உள்ளூராட்சி அமைப்பிடம் (இப்போதைய மாநகரசபையிடம்) பாரதீனப்படுத்தப்பட்டிருப்பதாக எண்ணிக்கை அளவில் கூறப்பட்டிருந்ததாம்.

இது போல யாழ்.மாவட்டத்தில் ஆயிரத்து முந்நூறுக்கும் மேற்பட்ட குளங்கள் பாரதீனப்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் இப்போது பதிவில் இருப்பவை ஆக 1042 குளங்கள்தான்.

யாழ்.நகரப் பகுதியில் மட்டும் சுமார் இருபது குளங்களைக் காணவில்லை. யாழ்.மாவட்டத்தில் சுமார் 300 குளங்கள் மாயமாக மறைந்து விட்டன.

எல்லாம் மண்நிரவி, காணி நிலங்களாகத் துண்டு போடப்பட்டிருக்கும் என்று நினைக்கிறேன்.

தமிழகத்தில்சென்னையில், சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட ஈஞ்சம்பாக்கத்தில் தட்டான்கேணி, தீர்த்தன்கேணி, உப்புக்கேணி, தாதியார் மானியகுளம், ராவுத்தர் கேணி உள்ளிட்ட 27 நீர்நிலைகளைக் காணவில்லை என்று தெரிவித்து ஒருவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்திருக்கின்றார்.

நாங்களும், யாழ். நகரத்தில் இருபது குளங்களைக் காணவில்லை என்று வடிவேலு பாணியில் பொலிஸ் நிலையத்தில் போய் முறையிட வேண்டியதுதான். கிணறு 'மூட' பூதம் புறப்பட்ட கதை இது தான்!

– மின்னல் –

---

## தமிழர்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொக்குவிலில் அமைந்துள்ள தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைமை அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

13ஆம் திருத்தத்தை அமுல்படுத்த வேண்டுமெனக் கோரி மிக மோசமாக ஆவணம் தயாரிக்கப்பட்ட நிலையில், அதன் மூலம் சுயநிர்ணய உரிமையை தமிழ் மக்கள் அனுபவிக்கலாம் என கூறுமளவுக்கு இந்தத் துரோகத்தனம் போகின்றது.

புதிய அரசமைப்பு நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவரப்படுகின்ற பொழுது 13ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்த கோருவது இனப் பிரச்சினை தீர்க்கப்பட்டு விட்டதாக உலகத்துக்கு காட்டும் நடவடிக்கையே ஆகும்.

இந்த விடயத்தை நாம் ஆழமாகப் பார்க்க வேண்டும். நாம் மீண்டும் மீண்டும் கூறுவதென்றால் இந்திய முகவர் அமைப்புக்கள் 12 வருடங்களாக மக்களிடம் பொய் சொல்லியதை இன்று உணரக் கூடியதாக உள்ளது. 13ஆம் திருத்தத்திற்குள் தமிழ் கூட்டமைப்பு தமிழ் மக்களை முடக்குவதாக 12 வருடத்துக்கு முன் நாங்கள் சொன்ன பொழுது மக்கள் அதனை நம்பவில்லை. இன்று அதனை வெளிப்படையாக நிரூபிக்கும் வகையிலேயே காரியங்கள் நடைபெறுகின்றன.

ஒரு தேர்தல் முடிவடைந்து இன்னொரு தேர்தல் நடக்க இன்னும் சில வருடங்கள் இருக்கும் நிலையில், இலங்கை முகவர்கள் – இந்திய முகவர்கள் இணைந்து 13 ஆவது திருத்தத்தை ஏற்றுக் கொள்கின்ற நிலை உருவாகியிருக்கின்றது.

இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழ் மக்களின் ஏகோபித்த ஆணையைப் பெற்ற தமிழ் தரப்பும் 13ஆம் திருத்தத்தையும் ஒற்றையாட்சியையும் ஏற்றுக் கொண்டு இருக்கின்றார்கள்.

இதற்கு எதிராக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மக்களை அணிதிரட்ட முடிவெடுத்து இருக்கின்றது. அந்த வகையிலே எதிர்வரும் ஜனவரி 30 ஆம் திகதி போராட்டம் ஒன்றை யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ள இருக்கிறோம். ஒவ்வொரு மாவட்டத்திலும் இதனைக் கொண்டு செல்ல இருக்கின்றோம். இதனை முதற்கட்டமாக யாழ்ப்பாணத்தில் செய்ய இருக்கிறோம்.

இதனைக் கிராம ரீதியாகவும் மேற்கொள்ள திட்டமிட்டுள்ளோம். எமது கட்சி உறுப்பினர்கள் மூலம் கிராமம் கிராமமாக சென்று மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த உள்ளோம். தமிழர்களின் உரிமைக்காக தொடர்ந்தும் உறுதியாக இருக்கின்ற அனைத்து மக்களையும் அரவணைத்து இதனை நாங்கள் மேற்கொள்வோம். – என்றார்.

## மாதகல் படகு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படகு விபத்துக்கு உள்ளான நிலையில் சகமீனவர்களினால் மீட்கப்பட்டபோது மீனவரும் சடலமாக மீட்கப்பட்டு இருந்தார்.

சம்பவத்தில் மாதகல் குசுமாந்துறையைச் சேர்ந்த 31 வயதுடைய சேர்ந்த திலீ பன் என அழைக்கப்படும் எட்வெர்ட் மரியசீலன் என்ற மீனவர் உயிரிழந்திருந்தார்.

இந்தப் படகு விபத்து , கடற்படையின் படகு மோதியதாலே ஏற்பட்டது என உள்ளூர் மீனவர்கள் குற்றம் சாட்டிய நிலையில் , கடற்படையினர் தமது படகு மோதவில்லை என மறுத்தமையுடன், இந்திய ட்றோலர் படகு மோதி இருக்கலாம் எனத் தெரிவித்து இருந்தனர்.

இந்திய ட்றோலர் படகுகள் கரையை அண்மித்து வர முடியாது எனவும் , படகு விபத்து ஏற்பட்ட பகுதிக்கு ட்றோலர் படகுகள் வருவதற்கான சாத்தியமே இல்லை எனவும் உள்ளூர் மீனவர்கள் தெரிவித்தனர்.

இந்நிலையிலையே மீனவரின் உயிர் இழப்புக்கு நீதி கோரி ஊரவர்களால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதேவேளை உயிரிழந்த மீனவரின் இறுதி கிரிகைகள் நேற்றைய தினம் மாதகலில் நடைபெற்று , உடலம் நல்லடக்கம் செய்யப்பட்டது.

---

## இந்தியாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

"இலங்கை கேந்திர முக்கியத்துவம் உள்ள இடமாக உள்ளது. அவ்வாறான சூழலில் இலங்கை சீனாவின் ஆதிக்கத்துக்குள் வருகின்றமை அனைவராலும் அவதானிக்கப்பட்டு வருகிறது. இது அயல் நாடான இந்தியாவிற்கு பாதுகாப்பு அச்சுறுத்தலை உருவாக்கும்.

எனவே, இந்தியா ஈழத் தமிழ் மக்களின் தொப்புள்கொடி உறவைப் பலப்படுத்தும் வகையில் நீண்ட காலமாகவே இங்கு புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினையைத் தீர்த்து வைக்க வேண்டும்.

மேலும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை வடக்கு, கிழக்கில் செய்வதன் மூலமாக இந்தியாவின் பாதுகாப்பும் எதிர்கால நலன்களும் கட்டியெழுப்பப்படும் என்பது மிக வெளிப்படையான உண்மையாகும். இது சாதாரண இராஜதந்திரம் தெரிந்த பொதுமகனுக்கே விளங்கும் போது இந்தியா அதில்மௌனம்காப்பதுகவலையளிக்கிறது.

இலங்கையின் இனப்பிரச்சினையை இந்தியாவே தீர்த்துவைப்பார்கள் என்ற நம்பிக்கையிலேயே தமிழர்கள் வாழ்ந்து வருகிறார்கள். இந்த நம்பிக்கையை இந்தியா கட்டியெழுப்ப வேண்டும். – என்றார்.

---

## தமிழக மீனவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

27 ஆம் திகதி வரை நீடிக்க ஊர்காவற்றுறை நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

நெடுந்தீவுக்கு அருகே கடந்த வருடம் டிசம்பர் 19ஆம் திகதி சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபட்டிருந்த இந்திய மீனவர்கள் 43 பேர் இலங்கை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டமையுடன் அவர்களின் 6 படகுகளும் கைப்பற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

---

## டிராக்டர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்டத்தின் புதுமாத்தளன் கடற்கரை பகுதியில் மண்ணுள் புதையுண்ட டிராக்டர் இயந்திரத்தின் பாகங்கள் சில மீனவர்களால் 8 ஆம் திகதியன்று இனங்காணப்பட்டிருந்தது

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடல் சீற்றம் அதிகமாகக் காணப்பட்ட நிலையில் கடற்கரையில் அலையின் தாக்கம் காரணமாக புதுமாத்தளன் கடற்கரைப்பகுதியில் கடந்த கால யுத்தத்தின் போது புதைக்கப்பட்ட டிராக்டரின் பாகங்கள் சில கரையில் தென்பட்டன. பெரிய ரயர்கள், இரும்பு துண்டுகள் கடற்கரையில் மண்ணுக்கு வெளியே துருத்திக் கொண்டு தெரிந்தன.

சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. முல்லைத்தீவு பொலிஸார் நேரில் சென்று பார்வையிட்டனர். நீதிமன்ற உத்தரவிற்கு அமைய தோண்டிப் பார்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுத்தனர்.

பொலிஸார், இராணுவத்தினர், கடற்படையினர், கிராம அலுவலர், நீதிமன்றப் பிரதிநிதிகள் எனப் பலர் முன்னிலையில் இந்த அகழ்வுப்பணி முன்னெடுக்கப்பட்டது. உக்கிய நிலையில் டிராக்டர் பாகங்கள் சில காணப்பட்ட நிலையில் அகழ்வு பணி நிறைவடைந்துள்ளது



# ஜனாதிபதி கோட்டாவின் பொங்கல் தின வாழ்த்து!



விவசாயம் செழிப்படையக் காரணமான சூரிய பகவானுக்கு நன்றி நவிலும் தைப்பொங்கல் தினம், இந்துக்களின் சிறப்புமிக்க கலாசாரம் மற்றும் மத ரீதியிலான பண்டிகையாக விளங்குகின்றது. உலக வாழ் இந்துக்களுடன் இணைந்து இந்தப் பண்டிகையைக் கொண்டாடும் இலங்கை வாழ் சகோதர இந்து மக்களுக்கு எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.–

– இவ்வாறு தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியிருப்பின் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

அவரது வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

தைப்பொங்கல் தினப் பாரம்பரியக் கொண்டாட்டங்களைக் கலாசார ரீதியாகச் சிறப்பாகக் கொண்டாடுவதன் மூலம், எதிர்காலத்தில் வளமான பயிர் அறுவடைக்கு சூரிய பகவானின் ஆசீர்வாதங்களும் பாதுகாப்பும் கிடைக்கின்றன என்பதே இந்துக்களின் நம்பிக்கையாகக் காணப்படுகின்றது.

சுபீட்சத்துக்கான பிரார்த்தனைகளில் ஈடுபடும் வகையில் இந்துக்களால் முன்னெடுக்கப்படும் சடங்குகள், காலங்காலமாக இலங்கைச் சமூகத்துடன் பின்னிப் பிணைந்திருக்கின்றன. விவசாயப் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட கலாசாரத்துடன் இணைந்த அனைத்து இலங்கையர்களும், தைப்பொங்கல் தினத்தை மிகுந்த மரியாதையுடன் எதிர்பார்க்கின்றனர்.

இயற்கையோடு இயைந்த வாழ்க்கை முறையுடன் வளமான எதிர்காலத்தை நோக்கிய எமது பயணம், பசுமை விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டதாகவே அமைய வேண்டும். இது, பசுமை விவசாயத்துக்கான தேசிய கொள்கைக்குப் பலன் தரும் என்பதே பெரும்பான்மையானோரின் நம்பிக்கையாக இருக்கின்றது. அதற்கான நோக்கத்துக்கு இந்தத் தைப்பொங்கல் கொண்டாட்டம் மிகுந்த உற்சாகத்தைத் தருவதாக நான் நம்புகிறேன். இந்த வருடமும், சுகாதாரத் துறையின் ஆலோசனைப்படி உங்களதும் உங்கள் அன்புக்குரியவர்களதும் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையிலேயே தைப்பொங்கலை அனைவரும் கொண்டாட வேண்டும். பாதுகாப்பான நாட்டின் செழிப்பு மற்றும் வளத்துக்காக அர்ப்பணித்துள்ள உங்களுக்கு, சூரிய பகவானின் ஆசீர்வாதமும் பாதுகாப்பும் எப்போதும் கிடைக்க வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன். – என்றுள்ளது.

# பண்டைக் காலந்தொட்டு கொண்டாடப்படும் ஒரேவிழா தைப்பொங்கல் திருநாள் மட்டுமே!

## பிரதமர் மஹிந்த வாழ்த்து



பண்டைய காலந்தொட்டு உலக சமுதாயம் பலவற்றாலும் கொண்டாடப்பட்ட ஒரு விழா – அறுவடை விழா. இதுவே உலகத் தமிழ் மக்கள் அனைவரும் கொண்டாடி மகிழ்கின்ற தைப்பொங்கல் விழாவுக்கான அடிப்படையாகும்.

– இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

தைத்திருநாள் உலகெங்கிலும் வாழ்கின்ற தமிழ் மக்கள் அனைவருக்கும் மத, கலாசார மற்றும் சமூக ரீதியாக மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நாளாகும். தமிழர்கள் தம் வாழ்வில் கொண்டாடி மகிழ்கின்ற பண்டிகைகளில் உன்னதமானதோர் நிகழ்வு இந்த தைத்திருநாளாகும். உழவர் பெருமக்கள் தங்களின் கடின உழைப்புக்குப் பயன் நல்கிய இயற்கைக்கு, தமது நன்றியுணர்வைத் தெரிவிக்கும் திருநாளாக இத்தைத்திருநாள் விளங்குகின்றது. அதனால் இத் தைப்பொங்கல் திருநாளிலே அனைவரும் சூரிய பகவானுக்கு நன்றி செலுத்தி மகிழ்கின்றனர். இயற்கையின் பெருமைக்கு முக்கியத்துவம் நல்கும் இத் திருவிழா, நன்றி மறவாத உன்னத பண்பினை நம் அனைவருக்கும் எடுத்தியம்பி நிற்கிறது.

இனம், மதம், மொழி ஆகியவற்றால் நம் தேசம் வேறுபட்டிருந்தாலும் – நாம் அனைவரும் இலங்கை மாதாவின் பிள்ளைகள் என்று சொல்வதிலே பெருமை கொள்வோம். நம் அனைவரினதும் எண்ணங்களும் எதிர்பார்ப்புகளும் ஒன்றாக அமைவதே இந்தத் தேசத்தின் சுபீட்சத்துக்கான அத்திபாரம்.

நாட்டைக் கட்டியெழுப்பும் சுபீட்சத்தின் நோக்கு என்ற உன்னத இலட்சியத்துடன் இலங்கை மக்களாகிய நாம் அனைவரும் ஒன்றுபட்டு முன்னேறிக் கொண்டிருக்கிறோம். இலங்கையில் மட்டுமல்லாமல் உலகெங்கிலுமுள்ள தமிழர்கள் அனைவரும் மகிழ்ந்து கொண்டாடும் இந்தத் தைத்திருநாளானது இன,மத, பேதம் கடந்து அனைவரும் கொண்டாடி மகிழும் உன்னத பொங்கல் விழாவாக மாறிவிட்டமை மகிழ்வளிக்கிறது. இந்த மாற்றம் நம் தேசமெங்கும் முழுமையாக மகிழ்வாக மலர வேண்டும். அனைத்து மக்களும் நிறைந்த சௌபாக்கியத்துடன், அமைதியும் சமாதானமும் நின்று நிலைக்கும் வகையில், மகிழ்வோடு வாழ இந்த நன்னாளிலே எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

இந்த மகிழ்ச்சியான நன்னாளிலே, தைப்பொங்கல் பண்டிகையை கொண்டாடி மகிழ்ந்துகொண்டிருக்கும் எம் சக உறவுகளாகிய தமிழ் உறவுகளுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கிறேன். – என்றுள்ளது.

# நேசமுடன் தைப்பொங்கல் நிறைக மாதோ!

உலகமெலாம் பேரின்பம் ஓங்கிப் பொங்க
உயிரனைத்தும் நலம் பெருகி உயர்வு பொங்க
வளம்பெருக்கித் தேசமெலாம் வளர்ந்து பொங்க
வற்றாத மழை பொழிந்து பயிர்கள் பொங்க
உளம் நிறைந்த அன்பதனால் உறவு பொங்க
ஓயாது அறம் பெருகி உணர்வு பொங்க
நிலம் முழுதும் நல்லோர்கள் நிறைந்து பொங்க
நேசமுடன் தைப்பொங்கல் நிறைக மாதோ!

அகிலமெலாம் போற்றுகிற ஆதி தேவன்
அற்புதனாம் ஆதவனும் உயிர்கள் தம்மை
தகதகத்து வான்வெளியில் தங்கமென்ன
தான் எழுந்து ஒளிபரப்பி அணைத்துக் காப்பான்

மகவெனவே நம்மையெல்லாம் பேணி நிற்கும்
மாபெரிய சூரியர்க்கு நன்றி கூறி
மகிமையுடன் நாமெல்லாம் பொங்கலிட்டு
மனதார அவன்தன்னைப் போற்றுவோமே!

பகை வளர்த்துப் பொங்கலிட்டு பண்பால்த் தாழ்ந்து
பாரதனைச் சிதைத்திடவே வழிகள் செய்தோம்
தகை மிகுந்த அறிவினையும் தாழச் செய்து
தன்னலத்தைப் பொங்கலிட்டு தரணி சாய்த்தோம்
வகை வகையாய் செல்வமதைத் தனித்துச் சேர்த்து
வறுமைதனைப் பாரதனில் பொங்கச் செய்தோம்
நகை மிகுந்த இச்செயல்கள் பாரில் சாய
நலம் மிகுந்த பொங்கலிட்டு மகிழ்வோம் நாமே!

கற்றவர்கள் மனதினிலே கருணை பொங்க
கல்லாதார் மனதினிலே அறிவு பொங்க
உற்றார்தம் உறவினிலே அன்பு பொங்க
உயர் சமய நெறியிலெலாம் உறவு பொங்க
நற்றவத்தார் மனதிலெலாம் ஒழுக்கம் பொங்க
நம் தலைவர் மனங்களிலே நேர்மை பொங்க
பற்றுடனே கலைகளெலாம் பரவிப் பொங்க
பார் முழுதும் தமிழினமும் பொங்க மாதோ!

**கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ்**



காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தை பிறந்தது; வழி பிறக்குமா?

இயற்கையின் மிக உயர்ந்த சிருஷ்டி மானுடம். இயற்கைத் தாயின் உயர்ந்த சேய் மானுடன்தான். இயற்கை அன்னையின் கருவகத்துடன் அவனின் தொப்புள் கொடி ஆழ வேர் விட்டுப் பதிந்து கிடக்கின்றது. இயற்கையின் மடியில் பின்னிப் பிணைந்து கிடக்கும் அவனால் இயற்கையைத் துறந்து, விஞ்சி வாழ்வது இயலாதது.

அப்படி இயற்கையோடு இயைந்து வாழ்வதுதான் மனித வாழ்வின் மேம்பாட்டுக்கு உயர்ந்தது என்பதைப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே உணர்ந்து, அதன் வழி வாழ்பவனே தமிழன். அந்த உணர்வின் வெளிப்பாடுதான் இன்றைய தைப்பொங்கல்.

அகில நாயகன் சூரியன். அவனின்றி அசையாது அவனி. அவனே உலக நாயகன். உலக இயக்கத்தின் காரணன். முற்றும் முழுதான மூல சக்தி அவனே. அணுவில் இருந்து அண்டம் வரை உயிர்ப்பும் உணர்வும் இயக்கமும் பெறுவது அவனால்தான். ஆக்கத்துக்கும் காரணம் அவனே. அழிவும் அவன் வழியே தான் வருகின்றது.

காலங்கள் மாறுவதும், பருவநிலை வேறுபடுவதும் கூட, காலகதி பிசகாத அவன் இயக்கத்தால்தான்.

உயிரின் மூலமும் உயிர்ப்பின் இயக்கமும் கூட அவனிலிருந்து தான் உற்பவமாகின்றன.

இந்த மெய்யுண்மையை உணர்ந்து கொண்ட தமிழன், உயிர்ப்பின் நாயகனை – உதய நாயகனை – நன்றியுடன் ஏற்றிப் போற்றி மதிப்பளிக்கத் தேர்ந்த பண்டிகைதான் இன்றைய பொங்கல்.

கதிரவனின் சக்தியைப் பூமிப்பந்தில் பதிப்பவை தாவரங்கள். காலைக்கதிர் தரும் வலுவை பச்சைத் தாவரங்களே தொகுத்துக் களஞ்சியமாக்கி நமக்குத் தருகின்றன. உலக உணவுச் சங்கிலியின் ஆரம்பம் – தோற்றுவாய் – அதுதான்.

அந்த உலக நாயகன், தன் கதிர்கள் மூலம் அள்ளிச் சொரியும் சக்தியை நெற்கதிர்கள் ஊடாக உலகுக்கு உவந்தளிக்கச் செய்யும் உத்தமன் உழவனே.

அதனால்தான் 'உலகமெனும் தேருக்கு உழவனே அச்சாணி' என்றான் செந்நாப் போதகன் திருவள்ளுவன்.

அத்தகைய உழவுத் தொழிலுக்கு மூல காரணனாக விளங்கும் உதயனுக்கு உழவனே எடுக்கும் நன்றித் திருவிழாதான் இன்றைய தைப்பொங்கல்.

சூரியனின் அசைவியக்கத்தால் காலநிலைகள் மாறுகின்றன, பருவநிலை மாற்றங்கள் நேருகின்றன என்பதை பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழன் அறிந்திருந்தான்.

பூமித்தாய் தன்னைத் தானே சுற்றியபடி, சூரியனையும் சுற்றி வருகின்றாள். அந்தச் சுற்றில் ஒரு புதிய அத்தியாயம் மீளப் பிறப்பதைச் சுட்டுவதே இன்றைய பொங்கல் நாள். தனு ராசியில் இருந்து மகர ராசிக்குள் பிரவேசிக்கும் இந்நாளைத் தான் மகரசங்கிராந்தி என்கிறோம். மகரத் திருவிழாவாகவும் தமிழர் பண்டிகையாகவும் கொண்டாடுகின்றோம். உத்தராயண ஆரம்பமும் இதுதான்.

அறுவடைக்கு உதவிய உதயனுக்கு பொங்கலிட்டு நன்றி தெரிவிக்கும் இந்நாள் பொதுவாக பண்டிகைக்குரிய மகிழ்ச்சித் திருநாளாகக் கருதப்படுகின்றது.

தை பிறந்தால் வழி பிறக்கும் என்று நம்பிக்கை கொள்வதும் கூட தைத்திங்களின் முதல் நாளான இன்றைய தினத்தை ஒட்டித்தான்.

ஆனால் இலங்கைத் தமிழர்களை – ஈழத்தவர்களை – பொறுத்தவரையில் இந்தத் தைத்திங்களும் முன்னைய வருடங்களைப் போல் மகிழ்ச்சி தராமல் கவலையும் அவநம்பிக்கையும் சோகமும் விசனமும் நிறைந்ததாகத்தான் பிறக்கின்றது.

நீதி கேட்டு, கௌரவ வாழ்வு வேண்டி, சமத்துவ உரிமையை வலியுறுத்தி, மூன்று தசாப்தங்கள் அஹிம்சை வழியிலும் பின்னர் மூன்று தசாப்தங்கள் அளவற்ற தியாகங்களுடன் ஆயுத வழியிலும் போராடித் தோற்றுப் போன தமிழினம், அதற்குப் பின்னர் பன்னிரண்டரை ஆண்டுகள் கடந்தும் பலனேதுமின்றி, ஏதிலியாக, அவநம்பிக்கையோடு, அடிமைப் படுத்தப்பட்டு அழிந்து போகும் நிர்க்கதி நிலையை எண்ணியபடி, ஏங்கித் தவித்தவாறு நிற்கின்றது.

தைபிறந்தாயிற்று. இம்முறையும் தமிழருக்கு வழி பிறக்காதா?

# நாட்டின் தலையெழுத்தை மாற்ற ரணிலால் மட்டும்தான் முடியுமாம்!

## ஐ.தே.க. மீண்டும் உறுதிபடத் தெரிவிப்பு

நாட்டின் தலையெழுத்தை மாற்ற முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் மாத்திரமே முடியும் என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

வறுமையில் வாடும் குடும்பங்கள் தமது பிள்ளைகளுக்கு உணவளிக்க முடியாமல் தவிப்பதால் எதிர்காலத்தில் ஊட்டச்சத்துக் குறைபாட்டை எதிர்கொள்ள அதிகாரிகள் தயாராக இருக்க வேண்டும் எனவும் அந்தக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான முன்னைய ஆட்சிக்காலத்தில் நாடு அரிசியில் தன்னிறைவு பெற்றிருந்தது என அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் தற்போது இந்தியா மற்றும் பல நாடுகளில் இருந்து அரிசியை இறக்குமதி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். பெரிய வெங்காயம், எலுமிச்சை, தக்காளி, குடை மிளகாய், கரட், போஞ்சி, கத்தரிக்காய், பூசணிக்காய், பாகற்காய், வெண்டைக்காய் மற்றும் கீரைகள் போன்றவற்றின் விலைகள் அதிவேகமாக அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.



பொது மக்களுக்கு ஆரோக்கியமான உணவைக் கொள்வனவு செய்ய முடியாது எனவும் தற்போதைய அரசாங்கம் குறுகிய காலத்துக்குள் மக்களை நாட்டை விட்டு விரட்டியடித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க 2015 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த வேளை தோல்வியடைந்த பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தினார் எனவும் குறிப்பிட்ட அவர், நாடு அனைத்துத் துறைகளிலும் பேரழிவை நோக்கிச் சென்றுகொண்டிருப்பதாகவும் எனவே, உண்மையில் நாட்டை வழிநடத்தி இலங்கையை வங்குரோத்து நிலையில் இருந்து காப்பாற்ற யாரால் முடியும் என்பதை பொதுமக்கள் அடையாளம் காண வேண்டும்.

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் மாத்திரமே நாட்டின் தலையெழுத்தை மாற்ற முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# யாழ். மாநகரசபையின் முத்தமிழ் விழா ஞாயிறு

## நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில்

யாழ்ப்பாணம், ஜன. 14

யாழ்ப்பாணம் மாநகரசபையினால் ஐ.பி.சி. தமிழ் நிறுவனத்தின் அனுசரணையுடன் முதன் முறையாக முன்னெடுக்கப்படுகின்ற முத்தமிழ் விழா நாளை மறுதினம் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் இயல், இசை, நாடகம் என மூன்று அரங்குகளாக நடைபெறவுள்ளது.

இயல் அரங்கம் மு.ப 8.30 - பி.ப 1.00 மணி வரை நடைபெறும். இவ்வரங்கில் கம்பவாரிதி இ.ஜெயராஜ் தலைமையில் இன்றைய உலக நடைமுறைக்குப் பொருந்தாத அறங்களை வகுத்துத் தந்த வள்ளுவர் குற்றவாளி எனும் தலைப்பிலான வழக்காடு மன்றம் இடம்பெறவுள்ளது. இயற்றுறைக்கு பெரும்பங்காற்றியமைக்கான அரசகேசரி விருது கவிஞர் சோ.பத்மநாத னுக்கு வழங்கி கௌரவிக்கப்பட உள்ளது.

இசை அரங்கம் பி.ப 3.30 - பி.ப 5.45 மணி வரை நடைபெறும். இவ்வரங்கில் ஈழ நல்லூர் பாலமுருகன், குமரன் பஞ்சமூர்த்தி குழுவினரின் நாத சங்கமும், ஈழத்தின் புகழ்பெற்ற மூத்த, இளைய இசைக்கலைஞர்களின் இணைந்த இசை ஆராதனையும் இடம்பெறவுள்ளன. இசைத்துறைக்கு பெரும் பங்காற்றியமைக்கான அரசகேசரி விருது இசைவாணர் முத்துக்குமாரு கோபால கிருஷ்ணனுக்கு (கண்ணன்) அவர்களிற்கு வழங்கி கௌரவிக்கப்பட உள்ளது.

நாடக அரங்கம் மாலை 7.00 - இரவு 10.00 மணி வரை நடைபெறும். இவ்வரங்கில் சத்தியவான் - சாவித்திரி இசை நாடகமும், வீரபாண்டிய கட்டப்பொம்மன் நாடகமும் இடம்பெறவுள்ளன. நாடகத்துறைக்கு பெரும்பங்காற்றியமைக்கான அரசகேசரி விருது அண்ணாவியார் வ.அல்பிரட்டுக்கு வழங்கி கௌரவிக்கப்பட்ட உள்ளது.

இந்நிகழ்வில் பொதுமக்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு யாழ். மாநகர சபை கேட்டுக் கொண்டுள்ளது.





தொழிலதிபர், கல்விக்காருண்யன் லயன் E.S.P. நாகரத்தினத்துக்கு Global Peace பல்கலைக்கழகத்தால் மனிதநேயம் மற்றும் சமூக சேவைகளுக்காக கலாநிதி பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. இக்கலாநிதி பட்டத்தைக் கொழும்பு பல்கலைக் கழகத்தின் கல்வியியல் பீடத்தின் முன்னால் பீடாதிபதி பேராசிரியர் திரு. S. சந்திரசேகரம் 10.01.2022 திங்கட்கிழமை அன்று வழங்கிக் கௌரவித்தார்.


யாழ்சிமாட்டின்
இனிய தைத்திருநாள் வாழ்த்துக்கள்
Yarl Smart PARTY
"happy home, happy life"
Cutting Sticker
Birthday Cakes
Party Smoke Machine
Party Bubbles Machine
Balloon Decoration
Dj Music
Surprise Gift
Lighting Decoration
Artificial Flowers Decoration
Surprise
Gifts & Dancing
இலவச நீர் பரிசோதனையுடனும், மிகக் குறைந்த விலையிலும், அதிகபட்ச உத்தரவாதத்துடனும், எங்கும் பெறக்கூடிய உதிரிப்பாக வசதிகளோடும், வாழ்நாள் முழுவதும் பராமரிப்பு சேவைகளுடனும், 24 மணித்தியாலத்தினுள் முறைப்பாடு திருத்திக்கொடுத்தல்.
YARL SMART Water Solution (Pvt) Ltd.
"Smart Water, Smart Life"
No.341 K.K.S Road, Jaffna.
021 430 0044, 076 666 5267
yarlsmartwater@gmail.com | www.yarlsmartwater.com
SCAN ME


இல்லங்கள் தோறும் ஆரோக்கியமும் மகிழ்ச்சியும் நிறைந்திட
இனிய தைத்திருநாள் நல்வாழ்த்துக்கள்
NFLASH SUPER DETERGENT
Plant : Kondavil East, Kondavil,Jaffna Tel: (+94) 21 221 4520 E-mail: hiclean24@gmail.com
Branch : 607A, K.K.S Road, Jaffna Tel: (+94) 21 222 2855 Fax: (+94) 21 221 4520
Branch : Railway Station Road, Kilinochchi Tel: (+94) 77 963 5551 / 021 228 2529
HOTLINE : 0778162637
TOTAL SOLUTION FOR CLEANING
உங்களுக்கு தேவையான அனைத்துவிதமான
துப்பரவாக்கிகளும், மிருதுவாக்கிகளும்
அதற்கான உபகரணங்களும்
HI CLEAN
WASHING LIQUID & WASHING POWDER

# நன்றிக்கு தலை வணங்கும் நாளாக தைப்பொங்கல் நாளை வரவேற்போம்!

## வாழ்த்துச் செய்தியில் டக்ளஸ் தெரிவிப்பு



சூரியனுக்கு பொங்கி படைத்து நன்றிக்கு தலை வணங்கும் பண்பாட்டு நாளாக தைப்பொங்கல் திருநாளை வரவேற்போம் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தனது பொங்கல் வாழ்த்து செய்தியில் தெரிவித்துள்ளார்.

மேலும் அந்த வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு –

நன்றிக்கு தலை வணங்குதல் என்பது தொன்று தொட்டு நிலவி வரும் தமிழர் பண்பாட்டு வழிமுறையாகும்.

உழுதுண்டு வாழும் உழவர் மக்களின் விளை நிலங்கள் யாவும் செழித்து வளர உதவிய சூரியனுக்கு நன்றிக்கடன் செலுத்துவதோடு மட்டுமன்றி, எமது மக்கள் தம் வாழ்வெங்கும் தம்மோடு கூடவே இருந்து தம் இன்ப துன்பங்களில் பங்கெடுத்து வருவோர்க்கும், அறம் சார்ந்த, அவலங்கள் இல்லாத யதார்த்த வழிமுறையில் தம்மை வழி நடத்தி செல்வோருக்கும் நன்றி செலுத்தும் பண்பாட்டையும் இன்னமும் அதிகமாக நேசிக்க வேண்டும்.

தை பிறந்தால் வழி பிறக்கும் வழி பிறந்தால் தம் வாழ்வு செழிக்கும், இதுவே எமது மக்களின் ஆழ்மன நம்பிக்கை. ஆனாலும், நம்பிக்கைகளும் அதற்கான வேண்டுதல்களும் மட்டும் இருந்தால் போதாது.

குறையிலா உயிர்கள் வாழும் மகிழ் காலத்தையும் தமது எதிர்காலத்தையும் எமது மக்கள் தாமே உருவாக்கும் தீர்மானங்களை தம் கைகளில் எடுக்க வேண்டும்.

உங்கள் இலட்சியத்தில் தோற்றீரானால் சூட்சுமத்தை மாற்றுங்கள், இலட்சியத்தை அல்ல என்ற கீத தர்ம உபதேசங்களை ஏற்று, எமது மக்கள் தமது கனவுகளை எட்டுவதற்கு இதுவரை முயன்று தோற்றுப்போன வழி முறைகளைக் கைவிட்டு, நாம் சொல்லும் நடைமுறை சாத்தியமான நற்சிந்தனைகளை இன்னமும் ஏற்று நடந்தால், பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற சமத்துவ நீதியின் உரிமை நோக்கி வெற்றியின் நம்பிக்கையோடு நடக்க முடியும்.

உலக நாடுகளெங்கும் சூழ்ந்திருக்கும் கொடிய நோயின் தாக்கங்கள் இலங்கைத் தீவையும் சூழ்ந்திருக்கிறது, சூழ்ந்து வரும் துயர்களை உடைத்து சுபீட்சமான சுதந்திர வாழ்வை சகலரும் பூரணமாக அனுபவிக்கும் மகிழ் காலத்தை விரைவில் வென்றெடுப்போம்.

**அறம் காப்போரை அறம் காக்கும்!**
**அறம் வெல்லும்,. அநீதி தோற்கும்!**

எமது மக்களின் நம்பிக்கைகள் வெல்லட்டும். – என்றுள்ளது.

# அன்பும் தர்மமும் வாழ்வில் தழைத்து நலம், பலம் உண்டாக வேண்டும்!

## இந்துக் குருமார் அமைப்பு பிரார்த்தனை



நாட்டில் அன்பும் தர்மமும் தழைத்து, நிலைக்க வேண்டும். அனைவர் வாழ்விலும் வளமும் நலமும் பலமும் இன்பமும் உண்டாக வேண்டும்.

– இவ்வாறு இந்துக் குருமார் அமைப்பின் தலைவர் கலாநிதி சிவஸ்ரீ கு.வை.க.வைத்தீஸ்வரக் குருக்கள், செயலாளர் சிவஸ்ரீ ச. சாந்தரூப குருக்கள் ஆகியோர் கூட்டாக விடுத்த பொங்கல் தின பிரார்த்தனையில் தெரிவித்துள்ளனர்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

எமது சமயங்கள் அனைத்தும் வாழ்வியலையே போதித்து எம்மை வழிப்படுத்துவதாக அமைந்துள்ளன. தைத்திருநாள் என்பது, சூரிய பகவான் தனுசு ராசியில் இருந்து மகர ராசிக்கு பிரவேசிக்கும் காலமாகும். உத்தராயண புண்ணிய கால ஆரம்பம் என போற்றப்படுகின்றது.

இன்னுமொரு வகையில் உழவர் திருநாள் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ளும் ஓர் சிறப்பம்சம் நிறைந்த நாளாகப் பார்க்கப்படுகிறது. அதாவது உழவர்கள் தம்தொழிலுக்கு உதவிகள் புரிந்த சூரிய பகவானுக்கு நன்றிகள் பகிர்ந்து, பொங்கலிட்டு படைத்து நிவேதனம் செய்யும் ஓர் விழாவாக – பண்டிகையாக நோக்கலாம். அத்துடன் அனைத்து உயிர்களையும் மதித்து அன்புடன் நன்றிகள் பகிர்ந்து கொள்வதாகவும் நாம் காணலாம்.

நாம் சமய வழி நிற்பதில், நடப்பதிலிருந்து பல்வேறு வாழ்வியல் தத்துவங்களை நடைமுறைகளை கற்றுக் கொள்ள வேண்டும். அன்பு செலுத்தி நடக்கப் பழக வேண்டும். நன்றிகள் பகிர்ந்து கொள்ளப்பழக வேண்டும். இயற்கையை நேசிக்கும் பாங்கைப் பழக, கற்க வேண்டும். இவ்வகையில் சமயங்கள் வாழ்வியலையே போதித்து நிற்கின்றன. அந்த வகையில் நாமும் கற்றுக்கொள்ள வேண்டும்.

எமது நாட்டில் அன்பு நிலைக்க வேண்டும். அறம் வேண்டும். தர்மத்தின் வழி நடக்க வேண்டும். அன்பு, அறம், தர்மம், நேர்மை, இயற்கையை மதித்தல் மேலோங்க வேண்டும். இவற்றை எல்லாம் இழப்போமானால் அல்லது மீறி நாம் நடப்போமானால் எமக்கு கிடைப்பது மிகவும் துயரம் மிகுந்த வாழ்க்கையாக அமையும்.

மலர்ந்துள்ள தைத்திருநாள் முதல் அனைவர் வாழ்விலும் வளமும் நலமும் பலமும் இன்பமும் பெற்று வாழ்க என அன்பே உருவான பரம்பொருளின் பாதம் பணிந்து பிரார்த்தனை செய்து, மனமார்ந்த நிறைந்த நல்வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் இந்துக் குருமார் அமைப்பின் சார்பில் பகிர்ந்து மகிழ்ச்சி அடைகிறோம்.

# பொங்கல் எப்படி இன்று இனிக்கும்?

**உழவனின் வயல்கள் உரமின்றி ஏக்கம்
ஊரெல்லாம் மக்கள் உணவின்றி தாக்கம்
பொருட்களின் விலையால் நாடே தயக்கம்
பொங்கல் எப்படி இன்றிங்கே இனிக்கும்!**

**பால் தரும் மாடுகள் மேயவும் தொல்லை
பஞ்சம் பசி பட்டினி இதுதான் நிலை
பாலர் அருந்தும் பால்மாவும் விலை
பாண்,அரிசி, பருப்பு, சீனியும் இல்லை!**

**பழங்கள் படைத்து பகலவனை வணங்கி
பட்டாடை உடுத்து கோயில்கள் சென்று
பட்டாசு கொழுத்தி கொண்டாட்டமில்லை
பாரம்பரியத்தை விட மனம் வரவில்லை!**

**தமிழர் திருநாள் என்பதால் நாங்கள்
தனித்துவமாக பொங்கலை போற்றுவோம்
தை பிறந்தால் வழி பிறக்குமோ தெரியாது
தன்னம்பிக்கையை கை விடாமல் வாழ்வோம்!**

**சூரியனுக்கு நன்றி நாம் செலுத்துவோம்
சுகமாக வாழவே பொங்கிப்படைப்போம்
சுற்றமும் நித்தமும் அன்பைப்பெருக்குவோம்
பற்றுடன் தமிழராய் பண்பாட்டை காப்போம்!**



**அம்பிளாந்துறையூர் அரியம்**



# இறைவனை நோக்கி உள்ளங்கள் என்றும் நன்றியினால் பொங்கட்டும்!

யாழ். ஆயர் கலாநிதி ஜஸ்ரீன் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை ஆசி



இலங்கையிலும் புலம்பெயர்ந்து உலகம் முழுவதிலும் பரந்து வாழும் தமிழ் மக்கள் தமக்குரிய தனித்துவமான நன்றியின் பெருவிழாவான பொங்கல் பெருவிழாவைக் கொண்டாடும் வேளை பொங்குக நன்றியால் பொங்குக – இறை அளித்த தரையை எண்ணி – தரை அளித்த விளைவை எண்ணி – பொங்குக நன்றியால் பொங்குக என்ற கிறிஸ்தவப்பாடல் மூலம் எமது வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம்.

– இவ்வாறு பொங்கல் ஆசிச் செய்தியில் தெரிவித்துள்ளார் யாழ். மறைமாவட்ட ஆயர் கலாநிதி ஜஸ்ரீன் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை.

அவரது ஆசிச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு –

தொழுநோய் நீங்கிய பத்துப் பேரில் ஒருவர் மட்டும் இயேசுவிடம் வந்து அவருடைய காலில் முகம் குப்புற விழுந்து அவருக்கு நன்றி செலுத்தினார். இயேசு அவரைப் பார்த்து பத்துப் பேரின் நோயும் நீங்கவில்லையா மற்ற ஒன்பது பேரும் எங்கே (லூக்கா 17: 17) என்று கேட்டு நன்றி கூறுவதன் முக்கியத்துவத்தை உணர்த்துகிறார்.

நன்றி கூறும் நல்ல பண்பு அனைத்து மனிதருக்கும் இருக்க வேண்டிய மிகவும் தேவையான ஒன்று. ஆனால் அநேகமான வேளைகளில் நாம் நன்றி கூறவும் நன்றியாக இருக்கவும் மறந்து விடுகிறோம். இது அவர்கள் பணி – இது அவர்கள் கடமை – அவர்கள் செய்யவே வேண்டும் என்றே எண்ணுகிறோம்.

முதலில் நம்மைப் படைத்த இறைவன் எமக்கு அன்றாடம் பொழியும் வரங்களுக்கு இறைவனுக்கு நன்றி கூறுவோம். அவர் என்றும் எம்மைப் பாதுகாப்பார் என்ற நம்பிக்கையுடன் அவருக்கு என்றும் நன்றியின் புகழ் பாடுவோம்.

அடுத்து நம்மோடு வாழும் மனிதர்கள் மட்டில் நன்றியாக இருப்போம். அன்புடைய பெற்றோர் அறிவூட்டும் ஆசிரியர்கள் வழிகாட்டும் குருக்கள் துணை புரியும் உபகாரிகள் என அனைவர் மேலும் என்றும் நன்றியுடையவர்களாக இருப்போம்.

இயற்கையுடனும் நன்றியாக இருப்போம். மண்ணை நேசிப்போம். மரங்களை வளர்ப்போம். இறைவனை நோக்கி உங்கள் உள்ளங்கள் என்றும் நன்றியால் பொங்கட்டும் என இறையாசீர் மிக்க வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம். – என்றுள்ளது.



# இல்லாதோருக்குப் பகிர்ந்து பொங்கல் கொண்டாடுவோம்!

வடக்கு ஆளுநர் வாழ்த்துச் செய்தி



இல்லாதோருக்குப் பகிர்ந்து இன்றைய தைப்பொங்கல் திருநாளைக் கொண்டாடுவோம் என வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராசா தமது தைப்பொங்கல் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். அந்தச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

இன்றைய தினம் தைப்பொங்கலைக் கொண்டாடும் அனைத்துக் குடிமக்களுக்கும், அனைத்துக் குடும்பங்களுக்கும் அன்புடன் தைப்பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன்.

மத மற்றும் கலாசார கொண்டாட்டங்கள் அமைய சிறிய அளவில் இடம்பெற்றாலும், விமர்சையாக நடந்தாலும் எங்கள் வாழ்த்துக்கள் என்றும் அவற்றுக்கு உண்டு.

இந்தக் கொண்டாட்டங்களை முன்னெடுக்க முடியாத இக்கட்டில் இருப்போருக்கு, அவர்களின் தேவையை நிறைவு செய்யும் விதத்தில் உரியவற்றை பகிர்ந்தளிக்கும் தாரள மனதுடன் இப்பண்டிகையை கொண்டாடுவோம். – என்று உள்ளது.













Yarl Mothercare
Towards Healthy Family
யாழ் மதர் கெயர்
YARL MOTHER CARE
Medical Specialist Consultation Hospital வைத்திய நிபுணர்கள் ஆலோசனை நிலையம்
சகல வைத்திய நிபுணர்களின் சேவைகள்
என்பின் அடர்த்தியை அளக்கும் சேவை
கண் பராமரிப்பு மையம்
"ஸ்கான்" & "எக்கோ" வசதிகள்
சகல ஆய்வுகூடப் பரிசோதனைகள்
முக அமைப்பு கதிரியல் வசதிகள்
இழையவியல் பரிசோதனை
"ஈ.சீ.ஜீ" & எக்ஸ்ரே வசதிகள்
தினமும் சேவை நேரம்
காலை 6.00
இரவு 10.00
Happy Pongal
எங்களினைத் தேடிவந்தெம்
சேவைகளால் மனம்நிறைந்து
வாழ்த்துக்களால் வளம்படுத்தி எமை
வாழ வைக்கின்ற வாடிக்கைப் பெரியோரே
தைப்பொங்கல் வாழ்த்துகள்! தளிர்த்திடுக உம்குடும்பம்!
021 221 9393 / 021 221 9595 / 021 221 9797 / 021 222 6363 / 021 222 9521
No: 514/18, Hospital Road, Jaffna. yarlmothercare.com yarlmothercare17@gmail.com

# இனிய தைப்பொங்கல் தின சஜித்தின் வாழ்த்துக்கள்!



உலகவாழ் இந்து மக்கள் தைப்பொங்கல் பண்டிகையை இறை பக்தியுடன் வெகு விமர்சையாக கொண்டாடும் நாள் இன்றாகும்.

- இவ்வாறு தெரிவித்தார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

அவரது வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

விவசாயம் சார் சமூக கட்டமைப்பை அடிப்படையாகக் கொண்ட இந்து சமூகம், செழிப்பான புத்தாண்டில் தனது முதல் அறுவடையை சூரியபகவானுக்கு பூஜிப்பதை அடிப்படையாகக் கொண்டு கொண்டாடப்படுகின்ற இந்தப் பண்டிகை, பரம்பரை பரம்பரையாக இந்து மக்கள் மிக கௌரவமாகக கொண்டாடி வருகின்ற வைபவமாகும்.

மனிதர்கள், விலங்குகள் மற்றும் இயற்கையின் மீது அன்பு, கருணை செலுத்துவதை தமது ஒரே நோக்கமாகக் கொண்டு உலகெங்கிலும் உள்ள இந்துக்களால் இந்தப் பன்டிகை கொண்டாடப்படுகின்றது.

தைப்பொங்கலை மனிதர்களுக்கிடையேயான நட்புறவை வளர்ப்பதற்கான மற்றும் பரஸ்பர புரிதலுக்கான வாய்ப்பாக அறிமுகப்படுத்தலாம்.

தைப் பொங்கலன்று, வீடுகளும் கோவில்களும் கோலம் மற்றும் ரங்கோலிகளால் அலங்கரிக்கப்படுகின்றன. இந்தக் கொண்டாட்டத்தின் முக்கிய சடங்கு பொங்கல் சாதம் தயாரிப்பதேயாகும். இது வெளிப்புறத்தில் ஓர் அழகான மண் பானையில் சமைக்கப்படும். சூரியக் கடவுளுக்கு முதல் பிரசாதம் வழங்குவது சாதாரண வழக்கமாகும். மிக பயபக்தியுடனும் கௌரவத்துடனும் சமைத்த பொங்கல் சாதத்தை அன்டை வீட்டாருடன் பகிர்ந்து கொண்டு பரஸ்பர சகோதரத்துவம், விருந்தோம்பல், நட்பு மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தி இவற்றைக் கொண்டு பேதங்களை நிர்மூலமாக்கக்கூடிய வைபவமே இந்த தைப்பொங்கல் வைபவமாகும்.


அத்தோடு இயற்கையோடு மென்மேலும் நெருங்க வேண்டிய தேவை அதிகமாக இருக்கும் இந்தக் காலகட்டத்தில், இயற்கையோடு இணைந்த தைப்பொங்கல் போன்ற கலாசார வைபவங்கள் அவசியப்படுகின்றமை நிதர்சனமே. மனித சமூகத்துக்கு இடையில் சுமுகமான தொடர்பை ஏற்படுத்துவதற்குத் துணையாக அமைகின்ற இவ்வகையான அற்புதமான வைபவங்களின் முக்கியத்துவம் அற்பமாதல்ல.

மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் இயற்கைக்கு மரியாதை செலுத்தும் பக்தி மற்றும் மகிழ்ச்சியாக அமையக் கூடிய தைத் திருநாளாக இத்தினம் அமைய எமது வாழ்த்துக்கள். - என்றுள்ளது.தாச எதிர்க் கட்சித் தலைவர்.

# தினமுமே பொங்கலாய் ஆக்கிடுவோம் வாரீர்!



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா



தையெங்கள் வாழ்வில் தலையாய மாதம்
தைபிறந்த பின்னால் வழிபிறக்கு மென்போம்
பொங்கலெனும் பரிசைச் சுமந்துவரும் மாதம்
தையெனவே எண்ணி தான்மகிழ்ந்து நிற்போம்

தைதொடங்கி விட்டால் தைரியமும் பெருகும்
தைப்பொங்கல் வாழ்வில் தனிதிருப்பம் அளிக்கும்
உள்ளமதில் உவகை ஊற்றெடுத்து நிற்கும்
உழைப்பதனை மனமும் ஏற்றுவிடத் துடிக்கும்

பொங்கலெனும் வார்த்தை பூரிப்பைக் காட்டும்
மங்கலமாய் பொங்கி மகிழ்கவென உணர்த்தும்
சொந்தமெலாம் சேர்ந்து நிற்கவெனச் சொல்லும்
சூழ்ந்திருந்து சுவையாய் சுவைக்கும்படி வைக்கும்

பட்டாசு மத்தாப்பு வாங்குவென வுரைக்கும்
பட்சணங்கள் செய்து பகிரவென்றும் பகரும்
புத்தாடை உடுத்துவென புத்தூக்கம் கொடுக்கும்
புத்தரிசி கொண்டுமே பொங்குவெனச் சொல்லும்

முற்றத்தில் கோலமிட்டு விளக்கேற்ற வைக்கும்
மூத்தோரின் கால்தொட்டு பணியும்படி வுரைக்கும்
அத்தையொடு மாமாவின் ஆசியையும் பெற்று
அணைத்துமே பொங்குவென அதுவுரைத்து நிற்கும்

புதுப்பானை எடுத்துப் பொங்கிலிடச் செய்யும்
பொங்கிவரும் பால்பார்க்க சுற்றிநிற்கச் சொல்லும்
பருப்போடு பச்சரிசி பானையிட வைக்கும்
பக்குவமாய் சர்க்கரையும் சேர்த்துவிடச் செய்யும்

பொங்கிவரும் பால்பார்த்து பூரிப்பு அடைவோம்
மங்கலங்கள் வாழ்வென்றும் நிறைகவென நினைப்போம்
சங்கடங்கள் சாம்பலாய் ஆகவென எண்ணி
சகலருமே இறைவனிடன் தான்வேண்டி நிற்போம்

அறமுடைய அரசாட்சி அமைந்துவிட வேண்டும்
ஆன்மீகம் அகமதிலே அமர்ந்துவிட வேண்டும்
அறநினைப்பு அகமதிலே எழுந்துவிட வேண்டும்
அனைத்துக்கும் பொங்கல் வழிசமைக்க வேண்டும்

மாநிலத்தை வதைத்தெடுக்கும் மாநோயகல வேண்டும்
மனமார அனைவருமே அதைநினைக்க வேண்டும்
மனவமைதி மனமகிழ்வு மனநிறைவு பெருக
மனமுருகி அனைவருமே வேண்டிடுவோம் வாரீர்

பாலாக இருப்போம் சர்க்கரையாய் இருப்போம்
பக்குவமாய் யாவருக்கும் சுவைகொடுத்து நிற்போம்
தேனாக இருப்போம் சேர்கவென அணைப்போம்
தினமுமே பொங்கலாய் ஆக்கிடுவோம் வாரீர்




# செஞ்சொற்செல்வரின் தைத்திருநாள் ஆசி!

## அனைவருக்கும் இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள் உரித்தாகுக.



சைவத் தமிழர் பண்பாட்டில் தைப் பொங்கல் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த விழாவாகும். இயற்கைத் தெய்வமாகிய சூரியனைக் கண்கண்ட தெய்வமாக வணங்குபவர்கள் தமிழர்கள். வீடு விடிய வேண்டும், நாடு விடிய வேண்டும் எனப் பிரார்த்தனை செய்வதற்காகப் பொங்கிப் படைக்கும் திருநாள் தைப்பொங்கலாகும்.

– இவ்வாறு சிவபூமி அறக்கட்டளை, தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம் ஆகியவற்றின் தலைவரும் அகில இலங்கை இந்துமாமன்றத்தின் உப தலைவருமாகிய செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுகன் தனது பொங்கல் தின ஆசியில் தெரிவித்துள்ளார்.

அவரது ஆசிச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

வீட்டு முற்றத்தில் சாணியால் மெழுகி மாவினால் கோலமிட்டுக் குத்துவிளக்கு ஏற்றிப் படையல் வைத்துப் பகலவனாகிய சூரியனுக்கு நன்றி செலுத்தும் நாளே தைப்பொங்கலாகும். பாடுபட்டு உழைக்கும் உழவர் பெருமக்களுக்கும் நன்றி செலுத்தும். இத்திருநாளில் அனைவரும் ஒன்றுபட்டு வழிபாடு செய்வோம்.

இயற்கைவளம்செழிக்கவேண்டும். அனைவருக்கும் உணவு கிடைக்க வேண்டும். தர்மம் நிலைக்க வேண்டும் என நாம் கடவுளிடம் மன்றாட வேண்டிய திருநாள் தைப்பொங்கல் ஆகும். எம் மண்ணில் நீதியான வாழ்வு கிடைக்கவும் வளங்கள் செழிக்கவும் மனதார வழிபாடுசெய்வோம்.

ஈழத் தமிழர்களிடையே உண்மையான ஒற்றுமை உருவாக வேண்டும் என்று ஓங்கி குரல் கொடுப்போம். எமது பாரம்பரியக்கலைகள், மரபுகள் சிதைந்து விடாது பாதுகாக்க முன்வருவோம். பள்ளித் தலங்களில் கல்வியையும், ஒழுக்க பண்புகளையும் எமது தலைமுறை நிறைவாகக் கற்றுக்கொள்ள வழி செய்வோம்.

வீண் விரயைத்தை தவிர்த்து உழைப்பினால் கிடைக்கும் ஒவ்வொரு துளி வருமானத்தையும் பக்குவமாய் பயன்படுத்துவோம். தீராத நோய்கள் அகலவும், வறுமைப்பிணி அகலவும் இந்நாளில் இறைவனை மன்றாடுவோம்.

சிறைக்கூடங்களில் தமிழ்மொழிக்காகவும், எம் இனத்துக்காகவும் வாழும் வயதில் வாடி நிற்பவர்கள் விடுதலை பெற்று விடிவு பெற உருக்கமாகப் பிரார்த்திப்போம். தைப் பொங்கல் திரு நாளில் அனைவருக்கும் இதயபூர்வமான ஆசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து அமைகிறேன். – என்றுள்ளது.


















அனைவருக்கும் இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்
கிருபா லேணர்ஸ்
කිරුබා ලර්නර්ස් KIRUBAA LEARNERS
அ.கிருபாகரன் -அதிபர்-
அரச அங்கிகாரம் பெற்ற வட மாகாணத்தின் முதல் தர கனரக வாகன பயிற்சிப் பாடசாலை.
குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
மும்மொழியிலும், உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
தவணைமுறைக் கட்டணங்கள்.
இரவிலும் வாகன பயிற்சிகள்.
NP L 2222
தலைமையகம்
226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4353 / 0777 22 5292
kirubalearners@gmail.com
www.kirubalearners.com
சுன்னாகம் 021 224 2022
நெல்லியடி 021 226 0700
பருத்தித்துறை 021 226 1100
ஆவரங்கால் 021 222 6688
சித்தங்கேணி 021 225 2500
சாவகச்சேரி 021 227 0700
பூநகரி 021 320 1818
முழங்காவில் 021 300 6544
விஸ்வமடு 021 320 1515
மன்னார் 023 225 1656
கிளிநொச்சி 021 228 5505
வவுனியா 024 222 7777




எமது அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய தைப் பொங்கல் நல்வாழ்த்துக்கள்
ஸ்ரீ குமரன் நகை மாளிகை
தங்கப்பவுண் நகை வியாபாரம்
அழகிற்கு அழகு சேர்க்கும் பாரம்பரியம் மிக்க அழகிய தரம் குன்றாத தங்க ஆபரணங்களை உங்கள் எண்ணம் போல் தெரிவு செய்து பெற்றுக்கொள்ள நாட வேண்டிய ஒரே இடம்
Sree Kumaran Jewellers
இல.74, பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி.
021 226 4465, 077 873 3482




அனைவருக்கும் இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்
இலங்கை மற்றும் இந்திய உணவுகளைக் குடும்பத்துடன் உண்டு மகிழ
சமுத்திரா மஹால் & சைவ உணவகம்
திருமணம், பூப்புனித நீராட்டு விழா, பிறந்தநாள் மற்றும் மங்களகரமான நிகழ்வுகளுக்கும் உங்கள் வீட்டில் நடைபெறும் அனைத்து சுப நிகழ்ச்சிகளுக்கும் சிறந்த முறையில் உணவு தயாரித்து வழங்கப்படும்.
021 224 3536, 0041 793 883 719
கே.கே.எஸ்.வீதி,மருதனார்மடம், சுன்னாகம்.

# சேற்றிலே கால்வைத்து நெல் அறுவடை செய்தால் நகரத்து மக்கள் சோற்றிலே தம் கை வைக்கலாம்

## சிவஶ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணி தேசிகர் ஆசிகள்



இல்லங்களில் பால் பொங்க...
உள்ளங்களில் இன்பம் பொங்க....
பொங்கலோ பொங்கல்

– என்று எங்கெங்கும் குரல் ஒலிக்கும் பொங்கல் திருநாள் பிறந்துவிட்டது. கிராமங்களில் வயல்களில் எல்லாம் செந்நெல் தலைசாய்ந்து களி நடனம் புரியும் காட்சியைக் கண்டு உழவர் பெருமக்களின் உள்ளங்களிலெல்லாம் கரைகாணாத மகிழ்ச்சி பொங்கிவழிகிறது. அவர்கள் வயல்களில் இறங்கி சேற்றிலே கால் வைத்து முந்திய நெல்கதிர்களை அறுவடை செய்தால்தான் நகரத்திலுள்ள மக்கள் எல்லோரும் சோற்றிலே கைவைக்க முடியும். ஆம். தித்திக்கும் சர்க்கரைப் பொங்கலைச் சுவைத்து உண்டு மகிழ முடியும்.

– இவ்வாறு தெரிவித்துள்ளார் இந்து மதகுரு பீடாதிபதியும் வல்வை ஶ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தான ஆதீனக்தேசிகருமாகிய சிவஶ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணி தேசிகர்.

அவரது ஆசிச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

ஏதேனும் சுபமான ஒரு செய்தியைக் கேட்க வேண்டுமென்றால் பொதுவாக 'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்பார்கள். அதாவது எத்தனை பிரச்சினைகள், தொல்லைகள் இருந்து வந்தாலும் தை மாதம் பிறந்தால் அவை அத்தனையும் விலகி மகிழ்ச்சி கிடைக்கும் என்பதே அதன் பொருளாகும். இந்நாளில் மக்கள் எல்லோரும் வாசலிலே வண்ண வண்ணக்கோலமிட்டு செங்கரும்புகளை நிறுத்தி வைத்து, புதுப்பானை வைத்து பொங்கலிட்டு மகிழ்ந்து, மார்கழியைக் தையணனகைபிடித்து வாழ்வு தரும் தையை, சீர்வரிசை ஏந்தி வரும் செல்வத் திருமகளே என வாழ்த்தி வணங்கி மகிழ்வார்கள்.

உழவர் பெருமக்கள், தாங்கள் மட்டும் மகிழ்ச்சியடைவதுடன் நில்லாமல் ஆண்டு முழுவதும் தங்களுடன் இருந்து தங்கள் உழவுத்தொழிலுக்கு உறுதுணையாக இருந்து ஒத்துழைக்கும் கால்நடைகளை மறவாமல், அவற்றையும் குளிப்பாட்டி கழுத்தில் மலர்மாலை சூட்டி அலங்கரித்து அவற்றிக்கும் பூஜை செய்து மகிழ்வார்கள். அக்கம்பக்கத்திலுள்ள வீடுகளில் உள்ளவர்களிடமெல்லாம் 'பொங்கல் பொங்கிச்சா? ' என்று கேட்டு நலம் விசாரித்து அன்பை வெளிப்படுத்தி களிப்படைவர்கள். இவ்வாறாக இல்லங்களிலெல்லாம் பால் பொங்க நல்லோர் தம் உள்ளங்களிலெல்லாம் இன்பம் பொங்க வைக்கும் நற்றமிழர் திருநாளாம் பொங்கல் நன்னாளை – பூரிப்புடன் வரவேற்று மகிழ்ந்து புத்துணர்வு பெறுவோமாக. – என்றுள்ளது.




# இந்து சமயப் பேரவையின் தைப் பொங்கல் வாழ்த்து



உலக இயக்கத்துக்கு மூலகாரணமாக விளங்கும் சூரிய பகவானுக்கு நன்றி தெரிவித்து பொங்கல் திருநாளில் அனைவருக்கும் எமது பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் இந்து சமயப் பேரவையின் யாழ்ப்பாணத் தலைவர் ஈசான சக்திகிரீவன்.

அவரது வாழ்த்துச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

சூரிய பகவான் மகர ராசிக்கு பிரவேசிக்கும் நாளே தைப்பொங்கல் திருநாளாகும். இந்த நாளில் சூரிய பகவானுக்கு பொங்கலிட்டு நன்றி தெரிவிப்பது பண்டு தொட்டு எமது மரபாகி வருகிறது. தை பிறந்தால் வழி பிறக்கும் என்பது முதுமொழி. இந்த முதுமொழிக்கேற்ப தமிழ் மக்கள் நீண்ட வெகுநாள் விருப்புகளை எல்லாம் பெற்று ஏனைய சமூகத்தோடு சரிநிகர் சமமாக வாழும் நிலை ஏற்பட வேண்டும்.

பல்வேறு துன்பங்களைக் கடந்த காலத்தில் அனுபவித்த மக்களின் உரிமைக்கான குரல் வலுப்பெற்று உலக அரங்கில் கௌரவமாக வாழும் தனித்துவத்தைப் பெறுவதோடு பாதிக்கப்பட்ட அனைத்து மக்களும் மனநிறைவு பெறக்கூடிய நீதியான தீர்வைப் பெற்று வாழ வழிபிறக்கட்டும். சூரியபகவான் தன்னை வழிபடுவோரையும், வழிபடாதோரையும் தம் ஒளிக்கீற்று சமமாக வீசிக் காப்பாற்றுவது போல நாமும் நன்மை தீமைகளுக்கப்பால் சென்று உலகிற்குநல்ல காரியங்களைச் செய்திட சங்கல்பம் பூணுவோமாக.

உலகை அச்சுறுத்தும் கொரொனாவிலிருந்து விடுபட்டு அனைவரும் சகல நலங்களும் பெற்று வாழ எல்லாம்வல்ல ஆடல்வல்லானைப் பிரார்த்திப்போமாக. – என்றுள்ளது.









# தமிழர்களுக்கு சகல சௌபாக்கியங்களும் கிடைப்பதற்கு சூரியனுக்கு பொங்கலிட்டு அவன் அருளை நாடி நிற்போம்

## நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் வாழ்த்து

இந்த வருடம் தமிழர்களுக்கு சகல சௌபாக்கியங்களும் கிடைக்க வேண்டும் என்று பிரார்த்தித்து சூரியனுக்கு பொங்கல் இட்டு அவன் அருளை நாடி நிற்போம் நம்பிக்கையுடன் - என்று தமது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்திருக்கிறார் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்.

அவரது பொங்கல் வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

கொரோனாவின் நிழலில் இம்முறை பொங்கல் பண்டிகை வருகின்றது. வீட்டில் இருந்து கொண்டே சூரியனை நோக்கி இதுவரை சூரியன் எமக்குச் செய்த நன்மை அனைத்துக்கும் நன்றி கூறுவோமாக. விவசாயிகளின் வாழ்க்கையில் வரும் முக்கிய பண்டிகை தைப்பொங்கல்.

தமிழர் பிரதேசங்களில் தை மாதமே அறுவடை செய்யும் மாதம். நெல் வயலில் பட்டபாட்டுக்கு விவசாயிகள் பயன்பெறும் காலம் இது. தமிழர்களும் இதுவரை காலம் பட்ட பாட்டிற்கு இம்முறைப் பங்குனி மாதப் பௌர்ணமியானவர் (Ides of March) நற்பயனை எய்தி அருளுவாராக.

எமது கட்சிக்கும் பொங்கலுக்கும் ஒரு தொடர்புண்டு. தமிழ் மக்கள் கூட்டணியின் சின்னம் பொங்கல் பானை. வருங்காலத்தில் எமது கட்சியின் பொங்கல் பானை அமுதசுரபி போல் தமிழ் மக்கள் அனைவருக்கும் மனதாலும் திறனாலும் அன்பாலும் பண்பாலும் பணத்தாலும் அள்ளிக் கொடுத்துக் கொண்டு இருப்பதாக. எம்மால் முடிந்ததைக் கொடுப்பதே ஒரு கட்சியின் கடமை. எடுப்பதல்ல.

கொரோனாவால் பீடிக்கப்பட்ட எமது தமிழ் அரசியல் கைதிகள் இன்றைய தினம் பொங்கல் உண்டு பொறுமையுடன் காத்திருப்பார்களாக. போரில் காணாமல் ஆக்கப்பட்ட உற்றார் உறவினரை நினைத்து வருந்தும் உறவுகள் இன்று பொங்கல் உண்டு நற்காலம் வரும் என்று எதிர்பார்த்து இருப்பார்களாக.

போரினாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட எம் மக்களுக்கு ஊரார், உறவினர் யாவரும் திரண்டு சென்று உலர் உணவுகளுடன் பொங்கலும் வழங்கி அவர்களை உற்சாகப்படுத்துவார்களாக.

நம்பிக்கையிலேயே உலகம் சென்று கொண்டிருக்கின்றது. இந்த வருடம் தமிழர்களுக்கு சகல சௌபாக்கியங்களும்



கிடைக்க வேண்டும் என்று பிரார்த்தித்து சூரியனுக்கு பொங்கல் இட்டு அவன் அருளை நாடி நிற்போம் நம்பிக்கையுடன்.

பொங்கலோ பொங்கல்! - என்று உள்ளது.











முருகன் துணை

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

# செவ்வழி நயனம்

## மெய்ப்பொருள்

**எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு- (குறள் - 423)**




எந்தவொரு பொருள் குறித்து எவர் எதைச் சொன்னாலும் அதை அப்படியே நம்பி ஏற்றுக் கொள்ளாமல் உண்மை எது என்பதை ஆராய்ந்து தெளிவதுதான் அறிவுடைமையாகும்.

மேற்குறித்த குறளின் வழி, மெய்ப் பொருளை அறிவதுதான் அறிவுடைமை யாகும் என்று திருவள்ளுவர் குறிப்பிடு கின்றார். இக்குறளுக்குப் பலர் பல்வேறு பொருள் கொள்கின்றனர். எனினும் எல் லோரும் மெய்ப்பொருள் காண்பதுதான் அறிவு என ஒன்றுபடுகின்றனர்.

மெய்ப்பொருள் என்பது யாது? அப்படிப் பட்ட ஒரு பொருள் உண்டா? அழிவில்லாத நித்தியமான பொருள் என்று ஒன்று உண்டா? அப்படி இருந்தால் அதன் நிறம் யாது? மணம் யாது? அதற்கு ஏதேனும் வடிவம் உண்டா? அது எங்கு இருக்கி றது? எப்படி இருக்கிறது?... இப்படிப்பட்ட பல கேள்விகள் எம்மில் எழக்கூடும்.

இப்படிப்பட்ட பல கேள்விகள் எழுந் தாலும் அதற்கான ஒரே விடை உண்டு என்பதாகும். உண்டு எனில் அதுயாது?அதுதான்முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளான இறைவன்.

தன்னை அறிதல் என்பது தன்னுள் பொதிந்துள்ள இறைவனை அறிதலா கும். இவ்வகையில் எம்முள் பொதிந் துள்ள இறைவனை அறிதலே உண்மை யான மெய்ப் பொருளை அறிதலாகும்.

இன்றைய நவீன விரைவு உலகில் நாம் எல்லோரும் கண்டதே காட்சி கொண்டதே கோலம் எனும் நிலையில் வாழ்ந்து வருகின்றோம். நாளாந்தம் எமது தேவையும் நோக்கமும் அதி கரித்துச் செல்கின்றன. அதனூடான பல்வேறு பிரச்சினைகளும் அதிகரித்துச் செல்கின்றன. பிரச்சினைகளுக்கான தீர்வினைத் தேடிய வண்ணமே பலரு டைய வாழ்க்கையும் முடிந்து விடுகின்றது. உண்மையில் பிரச்சினை என்பது தானாக உருவான விடயம் இல்லை. நமது செயற் பாடுகளே பிரச்சினைகளை உருவாக்கு கின்றன. அப்பிரச்சினைகளுக்கான தீர் வும் நம்மிடமே உள்ளன. நன்மையோ தீமையோ, நல்லதோ கெட்டதோ அனைத் தும் நமது செயற்பாட்டின் விளைவுகளே.

ஒருவருடைய எண்ணத்திற்கேற்ப சிந்தனையும், சிந்தனைக்கேற்ப தீர்மா னமும், தீர்மானத்திற்கேற்ப முடிவும், முடிவிற்கேற்ப செயலும், செயலுக்கேற்ப பலனும் கிடைக்கின்றது. எனவே எமது எண்ணமும் சிந்தனையும் செயலும் நன் றாக அமைந்தால் எல்லாமே நன்மையாக விளையும். இதனையே 'நல்லதே நினை யுங்கள்; நல்லதே நடக்கும்' என்ற ஆன் றோர் வாக்கு சுட்டிநிற்கின்றது.

**சி. குருபரநாத்**
**(பட்டதாரிப் பயிலுநர், பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்)**

## பத்மாசனம்




**செய்(படி)முறைகள்:**

1. நேராக நிமிர்ந்து உட்கார்ந்து இரு கால்க ளையும் நேராக நீட்டவும். பாதங்கள் இரண்டும் இணைந்திருக்கத்தக்கவாறு இருஉள்ளங்கைகளையும் புட்டப்பகுதியின் இருபக்கங் களும்தரையில்வைக்கவும்.

2. வலது காலை மடக்கி வலப்பாதத்தை இடது தொடைமீது அடிவயிறு சேருமிடத்தில் வைக்கவும்.

3. இடது காலையும் மடக்கி இடப்பாதத்தை வலது தொடைமீது அடிவயிறு சேருமிடத்தில் வைக்கவும்.

4. உள்ளங்கைகள் மேல்நோக்கியவாறிருக்க முழங்கால்களின் மீது வைக்கவும். பின்னர் பெருவிரல் நுனியையும், சுட்டுவிரல் நுனியையும் சேர்த்து மற்றைய மூன்று விரல்களையும் நீட்டியபடி (சின் முத்திரை) பிடித்துக் கொள்ளவும். அமைதியாக நிமிர்ந்து இருந்து ஆழமாக சுவாசிக்கவும்.

5. பின்னர் இடது காலையும் வலது காலையும் விடுவித்து நீட்டி ஆரம்ப நிலைக்கு வரவும்.

**பலன்கள் :** உடல் முழுவதும் சக்தி தொடர்ந்து சமமாகப் பரவும். நுரையீரல்களுக்கு அதிக பிராணவாயு செல்லும். இடுப்பு பலமடைந்து முள்ளந்தண்டு நேராகி சுறுசுறுப்பு அதிகரிக்கும். வஜ்ராசனம் செய்வதால் ஏற்படும் முழுப்பலனும் கிடைக்கின்றது. முதுகு தண்டுவடம் நேராகும். நரம்புப் பலவீனம் இல்லாமல் போகும். குடற்புண்கள், வயிறு கோளாறுகள் நீங்கும். இரத்த நாடி நாளங்கள் விழிப்படை கின்றன. மனம் அமை தியடையும்.

**- ஸ்ரீ. நதிபரன் -**
**(யோகா போதனாசிரியர், நல்லூர் திவ்ய ஜீவன சங்கம்)**

## நல்லை கந்தன் கழற்கோர் கவிமாலை



தானதன தான தன்ன தானதன தான தன்ன
தானதன தான தன்ன - தனதான

அன்புமன ராகி யுன்தனது பாதம்
அன்பொடுதி னாதி - தொழுவேதான்
அங்கமெனு வாழ்வு கங்குலது காண
தங்கமயி லேறி - வருவோனே
துன்பமது பாறி யின்பமது ஊறி
சென்மமதி லாது - அருளாயோ
துங்கமதி யோடு கங்கைநதி சுடு
தொன்மைமிகு நாத - ரருள்பாலா
கன்மவினை யாவு முன்விழிய தால
கன்றுவிடு மாறு - பெறுவேனோ
கந்தமலர் சூடி அன்றமரை ஆடி
நின்றமரை யாள - விடுவேலா
நன்மையது நீடு என்னுடைய தாக
நன்கருளை வாரி - பொழியாயோ?
நைந்துருகு நேயர் சிந்தைநிறை வாக
நல்லையது மேவு - பெருமானே!

**- கவிஞர் இராசையா குகதாசன் -**

## சூரியப் பொங்கல்



இந்து மக்களுக்குரிய பண்டிகைகள், விழாக்கள் என்பன ஒவ்வொரு தத்துவச் சிறப்பையும் தனித்துவத் தையும் எடுத்துக் காட்டும் வகையிலேயே அமைந் துள்ளன. அந்த வகையில் ஒன்றாக முக்கியத்துவம் பெறும் தைப்பொங்கல் திருநாள் ஒரு பண்டிகை என் பதற்கும் மேலாக, சூரிய வழிபாட்டுக்குரிய அதிவிசேட தினமாகவும் சிறப்புப் பெறுகிறது.

நவக்கிரக நாயகர்களுள் முதன்மையானவர் சூரிய பகவான். உலகில் சூரியனின் இயக்கம் செம்மையாக அமையப்பெற்றால்தான் மனிதகுலம் மட்டுமல்ல, அனைத்துஜீவராசிகளும், தாவரங்களும் செயற் படக்கூடியதாக இருக்கும். அதாவது உலகம் முழு வதும் உயிர்ப்புடனும், சக்தியுடனும் இயங் கு வதற்கு அடிப்படைக் கார ணமாகவும் ஆதாரமா கவும்திகழ்வது சூரிய சக்தி யாகும்.

உழவுத் தொழிலுக்கு துணை நிற்கும் நிலம் நீர், ஆகாயம் எனும் இயற்கைச் சக்திகளின் செயற்பாடுக ளுக்கு பேருதவியாக இருக்கும் பெரும் சக்தியாகவும் கண்கண்ட தெய்வமாகவும் விளங்கும் சூரிய பகவானை போற்றித் துதிக்கும் வகையில் வருடந்தோறும் நடத்தும் ஒரு வழிபாட்டு நிகழ்வாகவே தைப்பொங்கல் அமைந் துள்ளது.

இன்னொரு வகையில் சொல்வதானால் நன்றி மற வாமையின் தனித்துவத்தை எடுத்துக்காட்டும் பெரு விழாவாக இன்றைய தைப்பொங்கல் அமைந்திருப் பதை குறிப்பிடலாம். பயனை அனுபவிக்கும்போது, அந்தப் பயனைப் பெறுவதற்கு உதவிய எவரையும் எதனையும் மறந்துவிடலாகாது என்ற உயர்ந்த பண்பையும் தைப்பொங்கல் எடுத்துக்காட்டுகிறது.

உழவர் பெருமக்கள், தங்கள் வாழ்வாதாரத்திற்கு உதவும் விவசாய முயற்சிகளின்போது நிலத்தில் விதைத்து அறுவடைசெய்த நெல்லிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட புத்தரிசியைப் பயன்படுத்தி சூரிய பக வானுக்குப் பொங்கிப் படைத்து தைமாதப் பிறப்பைக் கொண்டாடுவதே தைப்பொங்கல் வரலாற்றின் ஆரம்ப மாக அமைந்திருந்தது.

இதனால்தான் உழவர் திருநாள் என்ற பெயரிலும் தைப்பொங்கல், அழைக்கப்பட்டு வந்தது. காலப் போக்கில் இது, இந்து மக்களது பண்டிகைகளுள் ஒன்றாக மாறி யதால் உழவர் பெருமக்கள் மட்டுமல்லர். அனைத்து இந்து மக்களும் தைமாதப் பிறப்பு நாளில் சூரிய பகவா னுக்குப் பொங்கிப் படைத்து வழிபாடு செய்வது வழக்க மாகிவிட்டது.

**அ.கனகசூரியர்**

# புதிய தொற்றுக்கள் தொடர்பில் மக்களே அவதானம்!

**வவுனியா வைத்திய சாலை பணிப்பாளர் ராகுலன் கோரிக்கை**



கொரோனாவின் புதிய தொற்றுக்கள், மக்கள் அவதானமாக செயற்பட வேண்டும் என வவுனியா பொது வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் க .ராகுலன் தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் வினவிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

கொரோனாத் தொற்று நோயின் தாக்கம் சுகாதார திணைக்களத்தின் கட்டுக்குள் இருக்கின்ற போதிலும் அது முற்றுமுழுதாக அபாய நிலைக்குள் அல்ல என்று நாங்கள் கருதிவிட முடியாது. புதிய திரிவுகள் மக்களிடம் பரவி வருகின்றது.

எனவே, பொதுமக்கள் பாதுகாப்பாகவும், அவதானமாகவும், பாதுகாப்பு நடைமுறைகளைத் தொடர்ந்தும் பேணி அவதானமாக செயற்பட வேண்டும். இதன் காரணமாகவே நாங்கள் வைத்தியசாலைக்கு பார்வையாளர்களாக வருபவர்களைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது . இதற்கு பொதுமக்கள் தமது பூரண ஒத்துழைப்புக்களை வைத்தியசாலைக்குத் தொடர்ந்து வழங்குமாறு மேலும் தெரிவித்துள்ளார்.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.01.2022இல் வெளியிடப்பெற்றது.



# சூரிய வழிபாட்டின் பொதுவும் சிறப்பும்

- கௌ.சித்தாந்தன் -

கடவுள்,பக்தன்,நம்பிக்கை மூன்றும் இணைந்ததுதான் வழிபாடு. மனிதனின் காப்புத் (பாதுகாப்புத்) தேவையின் முதன்மைநிலைக் கண்டுபிடிப்புத்தான் கடவுள்.

இப்படிப் பார்த்தால் இவ்வுலகில் மனிதனின் முதற் கண்கண்ட தெய்வம் சூரியக்கடவுள்தான் என்பது தெரியவரும். 'பரிணாமவாத முறைப்படி நோக்கும்போது சிவபெருமான் சூரியனாக வழிபட்டாரென்று கூறுவதிலும் பார்க்க, சூரியன் பெருமானாக வழிபட்டாரென்று கூறுவது கூடிய அளவு பொருத்தமுடையது' என்று டாக்டர் ஆ.வேலுப்பிள்ளை கூறுவது தெளிதற்குரியது. சூரியக்கடவுளை 'நமஸ்காரப்பிரியன்' என்றும் சிறப்பிப்பார்களாம். வேதகாலத் தெய்வங்களை அவை தங்கும் இடங்களை அடிப்படையாகக் கொண்டு வகைப்படுத்தியவர், சூரியனை விண்ணுக்குரிய தெய்வமாகக் குறிப்பிட்டார்.

சூரியனின் தோற்றத்தினாலே பொழுது விடிகின்ற காரணத்தினால் கைம்மாறு கருதாது இருளகற்றி வெளிச்சத்தைக் கொடுக்கும் அதனை விருப்புடன் கைதொழுது வணங்கியிருப்பர். நீண்டகாலமாக எமக்கு உணவளித்து வந்த உழவர்களால் காலையில் அவசர அவசரமாக வழிபடப்பட்டு வந்த சூரியனுக்கு நன்றிக்கடனுடன் நிறைவானதொரு விழா எடுப்பதற்காக தைமாத முதல்நாளில் பொங்கல் பண்டிகையைக் கொண்டாடினர். இதனால் சூரியனுக்குரிய இந்தச்சிறப்பு வழிபாட்டுக்குரிய முன்னோடிகள்தான் என்று தெரிகிறது.

இப்படிக்கூறுவதன் மூலம் எங்கள் உழவர்கள்தான் சூரிய வழிபாட்டிற்கும் சொந்தக்காரர் என்று கொள்ளவியலாது. 'ஒன்றென்றிரு; தெய்வம் உண்டென்றிரு' என்பதற்குச் சூரியவழிபாடும் சிறந்த பிரத்தியட்சம். உலகிலுள்ள பலநாட்டு மக்களால் சூரியன் பல பெயர்களில் சமயங்கடந்து வழிபடப்பெற்று வருகிறான். ஜப்பான் நாட்டின் அரசஇலட்சனை சூரியன். ஜப்பானியரில் பலர் சூரியனை 'மரா ஹரி' என்று சொல்லிப் பணிந்து வணங்குவர். மரா ஹரி என்றால் 'பகலின் கண்' என்று அர்த்தமாம். தமிழிலே சூரிய,சந்திரர் என்று வரிசைப்படுத்திச் செல்வது போலவே ஆங்கிலேயரும் வாரநாள்களைக் குறிப்பிட்டிருக்கின்றனர். சூரியனை முதன்மைப்படுத்தி வரும் இந்த ஒழுங்கினை உருவாக்கிய பெருமை பபிலோனியருக்குரியது.

இருக்குவேதத்திலே வரும் 'ரிதம்' என்ற சொல் ஒழுங்கைக் குறிப்பது. வேதகாலத் தெய்வமான வருணன் 'ரிதசய கோபா'என்று அழைக்கப்பட்டான். இதன் பொருள் ஒழுங்கின் காவலன் என்பதாகும். இதனை வைத்துப் பார்க்கும்போது இந்த ஒழுங்கிற்குரிய முன் மாதிரியாக சூரிய தேவனே விளங்குகிறான் என்பது தெரிகிறது.

பாரதநாட்டிலே பிறந்து ஒழுக்கத்திலும் நீதியிலும் சிறந்து விளங்கிய முன்னோர்கள் தம்மைச் சூரிய குலத்துதித்தவர்கள் என்றுதான் குறிப்பிடுகின்றனர். மநு, இராமன்,அரிச்சந்திரன் முதலானோர் இவ்வாறு குறிப்பிடப்படுபவர்கள். 'இரவி தன் குலத்து எண்ணில் பல் வேந்தர் தம் நல்லொழுக்கின்படி பூண்டது.' என்று கம்பநாட்டாழ்வாரும் பாடியுள்ளார்.

பகவத்கீதையிலே கண்ணன் தாம் சூரியன் என்று குறிப்பிட்டுள்ளார். வைஷ்ணவர்கள் 'சூரிய நாராயணன்' மூர்த்தி பேதத்தையும் வணங்குவர். அப்பரடிகள் சிவசூரிய வழிபாட்டினைப் பற்றிப் பலவிதங்களில் பாடியிருப்பதனை டாக்டர் ஆ.வேலுப்பிள்ளை அவர்களும் (தமிழர் சமய வரலாறு,1980,பக்.105 - 111.) எடுத்துக் காட்டியிருக்கிறார். திருமுருகாற்றுப்படையிலே முருகப் பெருமான் சூரியனாக உருவகிக்கப்பட்டிருக்கிறார். காவிரிப்பூம்பட்டினத்திலே, 'உச்சிக்கிழான் கோட்டம்' என்ற பெயரில் பெருங்கோயில் இருந்தமையினைச் சிலப்பதிகாரத்தின் மூலம் அறிகிறோம். 'சூரியனார் கோயில்' எனும் ஊர்ப்பெயர்(தலம்) கொண்ட சூரியனாலயம் தமிழ்நாட்டின் தஞ்சாவூர் மாவட்டத்தில் ஆடுதுறை அருகில் இருக்கிறது. இந்தியாவின் ஒரிஸ்ஸா மாநிலத்தில் உள்ள 'கொனாரக்' எனும் சூரியன் கோயில் உலகப்பிரசித்தமானது.

இலங்கையில் சூரியனுக்கு தனியான கோயில் இல்லை. சூரியனை முழுமுதற் கடவுளாகக்கொண்டு வழிபாடாற்றும் 'சௌர மதத்தினர்' எனும் பிரிவினரும் இங்கில்லை. சூரியன் பரிவாரத் தெய்வமாகவே இங்கே வழிபாடாற்றப்படுகிறார். சிவன் கோயில்களிலே அவற்றின் பிரதானமான வாயிலுக்குச் சமீபமாக மேற்கு நோக்கியவாறு சூரியன் காணப்படுவார். அவருக்குத்தான் முதற்பூசை நடைபெறும். இதனைவிட சந்திரன், செவ்வாய், புதன், குரு,சுக்கிரன், சனி, இராகு, கேது, எனும் கிரகங்களைப் பரிவாரமாகக்கொண்ட சூரியன் ஆலயம் பிரதான ஆலயத்தின் வடகிழக்குப் பக்கமாக பலிபீடம்,கொடித்தம்பம் என்பனவற்குச் சமீபமாக அமைந்திருக்கும். மூலமூர்த்தியின் பிம்பத்தின்மீது சூரியகிரணம் தெறிக்கச் செய்யும் வகையில் ஆலயம் அமைக்கப்பட்டிருக்க வேண்டும் என்று ஆகமம் மற்றும் சிற்பசாத்திரநூல்கள் குறிப்பிடுவதிலிருந்து சூரியனுக்கும் இறைவனுக்கும் உள்ள இணைப்புத் தெரியும்.

சூரியன் எட்டுக்கிரகங்களின் தலைவர் எனும் முறையில் இவர் 'கிரகபதி'என்று அழைக்கப்படுகின்றார். இச்சூரியனார் சிவபெருமானின் அட்டமூர்த்தங்களுள் ஒன்று எனும் வகையில் சூரிய தேவனை அல்லது சூரிய பகவானைச் சைவர்கள் பயபக்தியுடன் வழிபாடாற்றுகின்றனர்.

'கந்தசஷ்டிக்கவசம்' எங்கள் உறுப்புக்கள் ஒவ்வொன்றையும், கந்தப்பெருமானைக் காக்குமாறு கேட்பதுபோல 'சூரியகவசம்' சூரியனைக் காக்குமாறு வேண்டுகிறது.



இந்தகவசம் யாக்ஞுவல்லியாரால் இயற்றப்பட்டது. காயத்திரி மந்திரம் சூரியனையே துதிக்கிறது. 'சவித்திரி' உபநிடதமும், 'சூரியதபினி' உபநிடதமும் சூரிய வழிபாட்டின் மகிமையினைக் கூறுவன. ஆவணி மாதத்தில் வரும் ஞாயிற்றுக்கிழமை சூரியனுக்கு உகந்த விரத காலமாகும்.

தைமாதப்பிறப்பு தமிழர்க்கு நல்ல தொடக்க நாளாகும் என்பதினை 'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்ற பழமொழியும் நன்குணர்த்தும். இதனை மெய்ப்பிக்குமாறு போல சூரிய பொங்கல் காணப்படுகின்றது. உளவியலாளர் குறிப்பிடும் 'மனவெழுச்சி' க்குரிய செயற்பாடாக சூரிய பொங்கல் நிகழ்த்தப்படுகின்றது. இதன்போது வெளிப்படும் அழகியல் உணர்ச்சிகள் நாம் மேனிலை பெற உந்துசக்தியாக அமைகின்றன. சூரியனுக்கு படைத்த இனிய பொங்கலையும் பலகாரங்களையும் உறவினர், விருந்தினர்களுடன் மகிழ்வோடு பகிர்ந்து உண்பதன் மூலம் பண்பாட்டு வளர்ச்சியினைப் பெற்றுக் கொள்கின்றோம். 'பொங்கலால் உள்ளங்கள் விரியட்டும்' என்று பேராசிரியர் சி.தில்லைநாதன் அவர்கள் கூறியதும் நிறைவாகக் குறிப்பிடத்தக்கது.

## பூமியிலே வருக புதுப்பொங்கல்!

எமக்கான பொங்கலொன்று
இனிதா கவர வேண்டும்
இன்னல் இருள கன்று - இன்பம்
பொங்கிச் சரிய வேண்டும்.

கண்துயிலும் வேளையிலும் - எங்கள்
கால்களெல்லாம் சேற்றிலுமாய்
எண்ணரிய நாட்களெல்லாம்
ஏருழவில் இலயித்திருந்தோம்.

பாத்திகட்டி நீரும் பாய்ச்சி
பத்திரமாய் பசளையிட்டோம்
சாற்றை உறிஞ்ச எழுகின்ற
சதிகார களை(கள்) பறித்தோம்.

நாற்று நட்ட பயிர்களெல்லாம்
நல்ல கதிர்தானும் கண்டு
காற்றி லாடும் புதுஅழகை
பார்த்து நாமும் அகமகிழ்ந்தோம்.

யானை பன்றி விலங்கு என
ஊடுருவும் தொல்லைகளை
ஓடோடி விரட்டுதற்கு
ஓயாது காவல் செய்தோம்.

முற்றிய கதிர் மணிகள்
முத்தமிட நில மகளை
எத்தனை வகை வகையாய்
எண்ணி யெண்ணி கனவுகண்டோம்.

அறுத்த கதிரை யெல்லாம்
ஆவலுடன் சூட டித்து
பொதிகள் பலவும் கட்டி
புன்னகைத்து நாமிருந்தோம்.

எல்லாம் முடிந்த வேளை
எஜமானன் அங்கு வந்து
மொத்தமாய் வண்டியிலே
முறுவல் செய்தே ஏற்றிச்சென்றான்.

வெறுங்கையை ஏந்தி நாமும்
வெந்து யரம் நெஞ்சடைக்க
கைகட்டி பார்த்திருந்தோம்
கண்ணில் நீர் பொங்கலிட.

இந்த நிலைகளெல்லாம்
ஏருழவர் எங்கள் வாழ்வில் - நாளை
ஓடி விலகச் செய்து, ஒன்றிணைந்து
பூமியிலேயோர் புதுப்பொங்கல்
காணலாம்வா.

ஷெல்லிதாசன்



# ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் சிங்கள வாக்குமூலத்தில் ஒப்பமிட மறுப்பு!

## தெரிவித்தார் மனோ கணேசன்

ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் சிங்கள வாக்குமூலத்தில் கையெழுத்திட தமிழ் முற்போக்கு கூட்டணியின்தலைவர்மனோகணேசன் மறுப்பு தெரிவித்துள்ளார்.

விசேட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவுக்கு கடந்த புதன்கிழமை காலை சென்ற தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், தனது சாட்சியம் வாக்குமூலம், தமிழில் இருந்து சிங்கள மொழிக்கும் சிங்களத்தில் இருந்து தமிழ் மொழிக்கும் உரை பெயர்ப்பு செய்யப்பட்டாலும் இறுதியில் கையெழுத்திடுவதாயின் அந்த ஆவணம் தமிழ் மொழியில் எழுதப்பட்டிருக்க வேண்டும்எனத்திட்டவட்டமாகஆணைக்குழு விசாரணையாளர்களுக்கு அறிவித்துள்ளார்.

இதனையடுத்து, விசாரணை இடைநடுவில் நிறுத்தப்பட்டு, பிறிதொரு உசிதமான தினத்தில் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக அவர் தனது முகப்புத்தகத்தில் பதிவிட்டுள்ளார். குறித்த பதிவில், 'நாட்டின் மொழிச்சட்டம், மொழிக்கொள்கை ஆகியவற்றுக்கும் பொறுப்பு கூறும் அமைச்சரவை அமைச்சராக நான் இருந்தேன். என்னிடமே மொழிச்சட்ட மீறலா?

விசாரணை இடைநடுவில் நிறுத்தப்பட்டு, பிறிதொரு உசிதமான தினத்தில் நடத்த முடிவானபோது 'நாங்கள் மீண்டும் மிகப் பலமாக வெகு சீக்கிரம் வரப்போகிறோம். ஆகவே, இந்த விசாரணை கோமாளித் தனங்களை எல்லாம் சீக்கிரம் நடத்தி முடியுங்கள் என்றும் கூறிவிட்டு வந்தேன்.

இலங்கை அரசமைப்பில் 4 ஆம் அத்தியாயம்22ஆம்பிரிவில்ஒவ்வொரு பிரஜைக்கும்சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய ஏதாவது ஒரு தேசிய மொழிகளில் தாம் விரும்பியவாறு வாய்மொழி மூலமாகவும் எழுத்து மூலமாகவும் பதில்களைப் பெற உரிமை இருக்கிறது.

நான் இன்று விசாரணைகளுக்கு சென்ற போது நாடாளுமன்ற வாய்மொழி உரைபெயர்ப்பாளரை அங்கே அழைத்து வைத்திருந்தார்கள்.

நான் சிங்கள அழைப்பாணையை திருப்பி அனுப்பி இருந்தமையால் அதை செய்து இருந்தார்கள். அவர் எனக்கும் விசாரணையாளர்களுக்கும் இடையில் உரை பெயர்ப்பு செய்தார். எனது வாக்குமூலம் சிங்கள மொழியில் தட்டச்சு செய்யப்பட்டது.

ஆனால், விசாரணையின் இடையில் 'எனது வாக்குமூலத்தில் நான் கையெழுத்திட வேண்டுமா?' எனக்கேட்டேன். 'ஆம்' என்றார்கள்.

'அப்படியானால் தமிழில் ஆவணத்தைத்தயார்செய்யுங்கள்' என்றேன்.

அந்த இடத்தில் தமிழில் கணிப்பொறி தட்டச்சு செய்ய அலுவலர் இல்லை என்பதால் விசார ணையை இடை நிறுத்தி விட்டு வெளியேறினேன்.

'குற்றவியல் கோவையின்படி சிங்களத்தில் ஆவணம் தயார் செய்ய முடியும். அதை உரைபெயர்ப்பாளர் எனக்கு எடுத்து சொன்னால் போதும்' என விசேட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரி ஒருவர் எனக்கு வகுப்பு எடுக்க முற்பட்டார்.



குற்றவியல் சட்டம் உட்பட எந்தவொரு சட்டமும் நாட்டின் அரசமைப்புக்குக் கீழேயே கணிக்கப்பட வேண்டும். உரை பெயர்ப்பு வேறு, மொழி பெயர்ப்பு வேறு. இரண்டையும் எனது தாய்மொழியில் பெற எனக்கு நாட்டின் அரசமைப்பின் 4 ஆம் அத்தியாயம் 22 ஆம் பிரிவின்படி உரிமை உள்ளது என நான் கூறியவுடன் விசேட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு அமைதியானது.

மேலும் இந்த விசேட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவே இதை நியமித்தவரை போன்று நகைச்சுவை யாக இருக்கிறது.

உலகில் எங்கும் ஊழல் திருட் டைத்தான் விசாரிப்பார்கள். அதில் ஒரு தர்க்க நியாயம் உண்டு. இங்கே 'ஊழல் திருட்டை ஏன் எப்படி விசாரித்தீர்கள்' என இவர்கள் கேட்கிறார்கள். இது இந்நாட்டுக்கே சிறுமை.

கடந்த அரசுக்கு முந்தைய அரசின் அமைச்சர்களின் மீதான ஊழல் குற்றச்சாட்டு விசாரணைகளை இந்த நாட்டு பொலிஸ் திணைக்களம்தான் முன்னெடுத்து வழக்குகளை இந்த நாட்டின் சட்டமா அதிபர்தான் தொடர்ந்தார். இன்று இதுபோன்ற இன்னொரு விசேட ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவை நியமித்து அவற்றை அரசியல் பழிவாங்கல் என சொல்லி, அதே சட்டமாதிபருக்கு வழக்குகளை வாபஸ் வாங்க அறிவுறுத்தல் விடுக்கப்பட்டு, அதன் வழக்குகள் வாபஸ் வாங்கப்பட்டு குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் வெளியே வந்து விட்டார்கள்.

இப்போது அது போதாது என்று உங்கள் அரசாங்கத்தில் அமைச்சராக இருந்து எப்படி ஊழல் திருட்டை விசாரித்தீர்கள் என இவர்கள் என்னைக் கேட்கிறார்கள்.

'நாம் சீக்கிரம் மீண்டும் மிகப்பலமாக வரப்போகிறோம். ஆகவே, இந்த விசாரணை கோமாளித்தனங்களை எல்லாம் சீக்கிரம் நடத்தி முடியுங்கள்' என்று கூறிவிட்டு வந்தேன். – என மேலும் தெரிவித்துள்ளார்.

# தமிழர்களின் மரபுத் திங்கள் அறிவிப்பும் தைப்பொங்கல் விழாவும் பிரித்தானியாவில்!

பல்லாயிரம் வருடங்களுக்கு முன்பு தோன்றிய மொழியான தமிழ் மொழி அதன் பன்முகத் தன்மையுடன் மேலோங்கி வளர்ந்து நிற்கின்றது. இந்த தமிழ் மரபின் நேர்த்தியை அடையாளம் கண்டு, பிரித்தானிய தமிழர் பேரவை தமிழ் மக்களை மேம்படுத்தவும், ஆழமாக வேரூன்றிய இந்த தமிழ் மரபின் நுட்பத்தை உலகிற்கு உணர்த்தவும் தொலைநோக்குடன் தனது நடவடிக்கைகளைத் தொடங்கியது. தமிழர்கள் ஆண்டு முழுவதும் பல தினங்களைக் கொண்டாடினாலும், தைப் பொங்கல் உள்ளடங்கிய மரபுசார்ந்த அறு வடை காலத்தை 'தமிழ் மரபுத் திங்களாக' கருதுகிறது.

பிரித்தானிய தமிழர் பேரவை 2011 இல் லண்டன் ஹரோ நகர சபையுடன் இணைந்து தைப்பொங்கல் விழாவை முன்னோடி நகர்வாக மேற்கொண்டது.

அதைத் தொடர்ந்து, பல சமூக அமைப்புகளுடன் இணைந்து 'தைப் பொங்கல்' விழா மற்றும் 'தமிழ் மரபுத் திங்கள்' என்பனவற்றுக்கான அங்கீகாரம் ஆகிய இரண்டையும் ஊக்குவிக்கத் தொடங்கியது.

அடுத்து வந்த ஆண்டுகளில், பிரித்தானிய தமிழர் பேரவை தனது தலைமைக் காரியாலயத்தில் தைப் பொங்கல் விழாவை சிறப்பாக முன்னெடுத்து பல தமிழ் இளைஞர்களின் பங்கேற்பை ஊக்குவித்தது. இவற்றில் தமிழ் சமூக பிரதிநிதிகள் மிகுந்த ஆர்வத்துடன் கலந்துகொண்டனர்.

இந்த் வேளையில், கனடா வாழ் புலம்பெயர் அமைப்புகள் மற்றும் தமிழ் மக்களின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு கனேடிய அரசாங்கம் 2016 ஆம் ஆண்டில் ஜனவரி மாதத்தை தமிழ் பாரம்பரிய மாதமாக அறிவித்தது. பிரித்தானிய தமிழர் பேரவை வரவேற்றிருந்ததுடன் அதனை பிரித்தானியாவில் வழிமொழியும் ஏற்பாடுகளை தீவிரமாக மேற்கொண்டது. 2018 ஆம் ஆண்டு தைப் பொங்கலை பிரித் தானியாவின் நாடாளுமன்றில் பெரு விழாவாக முன்னெடுத்தது. இதில் கன்சர்வேட்டிவ், தொழிலாளர் மற்றும் லிபரல் ஜனநாயகக் கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழ் பாரம்பரிய உடையான வேட்டி மற்றும் சால்வை அணிந்து கலந்து கொள்ளத் தொடங்கினர்.

அடுத்தடுத்த ஆண்டுகளில், பிரித்தானிய தமிழர் பேரவையின் முயற்சிக்கு ஊக்கமும் ஆதரவும் அபரிமிதமாக இருந்தது. மேலும் 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் ஏராளமான தமிழ் பாரம்பரிய நடனங்கள் மற்றும் கலாசார நடவடிக்கைகளுடன் தமிழர் திருநாளை மேம்படுத்த தமிழ் இளைஞர்கள் முன்வந்தனர்.

2019 இல் இந்த விழாவை 'செழுமையான மரபினைப் போற்றும் தமிழ் இளைஞர்கள்' என்றும் பின்னர் 2020 இல் 'தமிழ் மரபுத் திங்கள்' என்றும் 2021 இல்; தமிழ் மரபினில் சுயசார்பு' என்றும் பெயரிட்டனர்.

2021 டிசெம்பரில் லண்டன் மாநகர அவையில் ஜனவரி மாதத்தைத் தமிழ் மரபுத் திங்கள் என பிரேரணை நிறைவேற்று வதற்கு எம்மால் தொடங்கப்பட்ட முன்முயற்சி ஆக்கத்தையும் ஊக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது என்பதையிட்டு பெருமிதம் அடைகின்றோம். லண்டன் மாநகர அவைக்கு பிரித்தானிய தமிழர் பேரவையின் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். பிரித்தானிய நாடாளுமன்றத்திலும் ஏனைய உள்ளூராட்சி மன்றங்களிலும் தமிழர் பாரம்பரியத்தின் விழுமியங்களைத் தொடர்ந்து பரப்புவதற்கான தனது முயற்சியை பிரித்தானிய தமிழர் பேரவை தமிழ் மக்களுடன் இணைந்து தொடர்கிறது, மேலும் அது தனது இலக்கை அடையும் என்பதில் திடசங்கற்பம் பூண்டுள்ளது.

பிரித்தானிய தமிழர் பேரவையால் வருடா வருடம் பிரித்தானிய நாடாளுமன்றத்தில் நடத்தி வரும் தை பொங்கல் மற்றும் தமிழர் மரபுத் திங்கழ் நிகழ்வு இம் முறை நாடாளுமன்றின் ஜுபிளி அரங்கில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தற்போதைய கொடிய வைரஸ் தொற்றின் காரணமாக மக்கள் பொது வெளியில் கூட இயலாத நிலை அதிகரித்துள்ளதால் நாடாளுமன்றம் கொண்டு வந்துள்ள புதிய கட்டுப்பாட்டு நடைமுறைகளுக்கு அமைய அவர்களின் விதிமுறைகளை மதித்து மாற்று வழிமுறையில்மெய்நிகர்நிகழ்வாகசூம்தொழிநுட்பத்தில் இம் மாதம் 17 ஆம் திகதி மாலை 7 மணியிலிருந்து 9 மணி வரை இடம்பெற உள்ளது.. எனவே எம் உறவுகளே! எல்லோரும் பாதுகாப்பாக இருப்பிடங்களில் இருந்து இவ் விழா நிகழ்வுகளில் பல்வேறு கலைஞர்கள், அனைத்துக் கட்சியையும் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், அறிஞர்கள் உடன் இணைந்து சிறப்பிக்குமாறு அன்பாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

# இக்கட்டான தருணத்தில் கிழக்கு முனைய பணிகளை ஆரம்பித்தமைக்கான காரணம் குறித்து பிரதமர் விளக்கம்



அரசாங்கம் எதிர்வரும் மூன்று வருடங்களை நாட்டின் அபிவிருத்தியை உறுதிப்படுத்தும் வகையில் முன்னோக்கி கொண்டு செல்லும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

கிழக்கு கொள்கலன் முனையத்தின் நிர்மாணப் பணிகளை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் உரையாற்றிய போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

அம்பாந்தோட்டை துறைமுகத்தின் நிர்மாணப் பணிகளை ஆரம்பிக்கும்போது, எதிர்க் கட்சியினர் திட்டங்களை மாற்றியமைக்க முயற் சித்தமையுடன், கப்பல்களை நிறுத்த முடியாது எனக் கூறி விமர்சனங்களை முன்வைத்தனர் எனவும் அவர் தெரிவித்தார்.

அப்போது அரசாங்கம் பொறுமை காத்து, முன் னெடுத்துச் சென்று துறைமுகத்தை நிறைவு செய்ததாகவும் குறிப் பிட்டார்.

அப்போதைய அரசாங்கம் நான்கு வருட காலப்பகுதியில் மோதலை முடிவுக்குக் கொண்டு வந்ததென்றும் அதே நேரத்தில் அதிவேக நெடுஞ்சாலை களை ஆரம்பித்தது என்றும் பிரதமர் கூறினார். எவ்வாறாயினும் முன்னாள் நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் துறைமுகத்தை விற்பனை செய்ததாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

இக்கட்டான தருணத்தில் கிழக்கு முனையம் போன்ற கடினமான பணியை ஏன் ஆரம்பிக்கிறார்கள் என்று பலர் கேள்வி எழுப்பினர் எனவும் பல அரசாங்கங்கள் சிரமங்களுக்கு மத்தியில் பின்வாங்கிவிட்டதாகவும் சவால்களைப் பொருட்படுத்தாமல் அரசாங்கங்கள் அபிவிருத்தியை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என தான் நம்புகிறேன் எனவும் அவர் தெரிவித்தார். கடந்த இரண்டு வருடங்கள் வீணாகி விட்டன எனவும் அடுத்த மூன்று வருடங்களை அரசாங்கம் தீர்க்கமான ஆண்டாகவே பார்க்குமெனவும் அவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் குடிமக்கள் மற்றும் அவர்கள் எதிர்கொள்ளும் கஷ்டங்களுக்கு அரசாங்கமே பொறுப்பு என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இந்தியா என்றால் இளக்காரமா?

ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி, என்ற பழஞ்சொல் உண்டு. அண்மையில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பிய கடித விவகாரத்தில், தமிழர் அரசியல் தரப்பு, அதிலும் குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின், தமிழரசு தலைமை அவ்வாறே எண்ணி செயற்படுவதாகவே எண்ணத் தோன்றுகிறது. ஆனால், அது குறித்து அவர்கள் யாருமே வருத்தப்பட்டதாகவோ, வேதனைப்பட்டதாகவோ தெரியவில்லை.

ரெலோ கட்சியின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் முன்னெடுத்த இந்த முயற்சியே இந்தியா சார்ந்த பதிமூன்றாவது சட்டத் திருத்தத்தை இலங்கை அரசு முழுவதுமாக அமுல்படுத்த உள்ளிலிருந்தும் புறத்திலிருந்தும் அழுத்தம் கொடுப்பது குறித்து மேலும் ஒரு முயற்சியாகவே ஆரம்பமாகியது ஆனால், முடிவில், இந்த முயற்சிகளெல்லாம், பதிமூன்றுக்கு அப்பால் என்ற நிலைபாட்டில் நிலையுண்டு, இந்தியாவிற்கு அப்பாலே சென்று நின்றுள்ளது. இது, இனப் பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில், இந்தியாவை அப்பால் நிறுத்தும் ஒரு முயற்சியாகவும் காணகூடியதாக உள்ளது.

முப்பது ஆண்டுகளுக்கும் முன்னதாக 1987 ஆம் ஆண்டின் இந்தியா - இலங்கை ஒப்பந்தமே, பதின்மூன்றாவது திருத்தத்தின் அடிப்படை. அதிலிருந்துதான், பதிமூன்றாவது சட்டத் திருத்தத்தை அமுல்படுத்துவதில் இந்தியாவின் தார்மீக உரிமையும் கடமையும் உருவாகின. தற்போது, பதின்மூன்று என்ற எண்ணை மட்டும் பயன்படுத்திக் கொண்டு, அதற்கும் அப்பால் என்ற புதிய நிலைபாட்டை கூட்டமைப்பு எடுத்துள்ளது. இந்தச் சூழ்நிலையில், இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் தார்மீக நிலைபாட்டில் இருந்து, இந்தியாவைத் தமிழர் தரப்பு தள்ளி வைத்து விட்டது என்பதே இராஜரீயமான உண்மை.


இந்த பின்னணியில், இந்தியா, கூட்டமைப்பின் பதின்மூன்றுக்கும் அப்பால் என்ற நிலையை ஆதரிப்பதும், அல்லது கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் நிலைபாட்டை ஆதரிப்பதும், அல்லது வேறு ஏதாவது ஒரு யாப்பு மாற்றத்தின் மூலம் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என்று கூறுவோரை ஆதரிப்பதும், எல்லாமே ஒன்று தான். பதிமூன்றை போல் அல்லாது, இது போன்ற எந்த நிலைபாட்டை இந்தியா எடுத்தாலும், அதனை இலங்கை அரசு செவி கொடுத்தேனும் கேட்க வேண்டும் என்ற தார்மீகக் கட்டாயம் எதுவும் இல்லை. இது, தமிழரசு மற்றும் கூட்டமைப்பு தலைமைக்கு தெரியாத விடயமல்ல.

கடந்த ஆண்டு, இலங்கை வந்த இந்திய வெளியுறவு செயலாளர் ஹர்ஷ் வர்த்தன் ஷ்ரிங்லா, கூட்டமைப்பு தலைமையிடம் பதின்மூன்று குறித்து இலங்கை அரசிற்கு அழுத்தம் கொடுக்குமாறு அறிவுறுத்தினார் எனச் செய்திகள் கூறின. அவ்வாறாயின், அது, மேற்கூறிய இராஜரீய காரணங்களால் மட்டுமே. இத்தகைய பின்னணியில், இந்தியா மீது அவசியமில்லாத, செயற்படுத்த முடியாத நிலைபாடுகளைத் தமிழர் தரப்பு திணிப்பது எந்த விதத்தில் நியாயம்?

**அரசுடன் பேச்சுவார்த்தை**

பதின்மூன்றும் மற்றும் பதின்மூன்றுக்கு அப்பால் என்ற இரண்டு நிலைப்பாடுகளில் உள்ள முரண்பாடுகள் புரியாத விடயம் அல்ல. இது தொடர்பாக விளக்கமளிக்கும் தமிழரசு ஆளுமைகள், பதின்மூன்றுக்கும் அப்பால் சென்று, தமிழர் தரப்பிற்கு அதிக அதிகாரங்களை வழங்குவதாக ஆளும் ராஜபக்ஷ தரப்பு கடந்த பத்தாண்டுகளாகவே, இந்தியாவிடம் உறுதி அளித்துள்ளதை சுட்டிக்காட்டித் தங்களது நிலையை நியாயப்படுத்துகின்றனர். ஒன்றில், இது போன்ற விடயங்களில் இராஜரீய நிலைமைகள் குறித்து அவர்களுக்கு முழு அறிவு இல்லை. அல்லது, அவ்வாறான அறிவு இருந்தும், வேண்டுமென்றே தவறான விளக்கங்களை அவர்கள் அளிக்கிறார்கள்.





என்.சத்தியமூர்த்தி

**அக்கரை அக்கறை அலசல்**

இனப் போர் முடிந்த காலகட்டத்தில் ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்ஷவும் சரி, தற்போது பதவியில் இருக்கும் கோட்டாபய ராஜபக்ஷவும் சரி, பதின்மூன்றிற்கு அப்பாலுமான அதிகாரப் பரவலுக்கு அரசு தயார் என்றும், அது குறித்து தமிழர் தரப்புகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவுமே சொன்னார்கள். மேலும், போர் முடிந்த கால கட்டத்தில், கூட்டமைப்புத் தலைமை மஹிந்தா அரசுடன் பதினெட்டுச் சுற்றுப் பேச்சில் நடந்தியது. எந்த ஒரு காலகட்டத்திலும், அரசு அனுசரணையாக நடக்கவில்லை, எனவே பேச்சுவார்த்தையில் இருந்து பின்வாங்குகிறோம் என்று கூட்டமைப்பு கூறவில்லை. அதன் அங்கத்துவ கட்சிகளில் அன்று இருந்த யாருமே அவ்வாறு கூறவில்லை.

இந்தக் காலகட்டத்தில், போர் குற்றங்கள் மற்றும் பிற மனித உரிமை மீறல்கள் விசாரணை குறித்து தமிழர் தரப்பு அரசிடம் எந்தக் குறிப்பிட்ட கோரிக்கையையும் முன் வைத்ததாகவும் தெரியவில்லை. ஆனால், அதிகாரப் பகிர்வு பேச்சுவார்த்தை முன்னேறி வந்த காலகட்டத்தில், போர் குற்றங்கள் குறித்து அமெரிக்கா போன்ற மேலை நாடுகள், ஜெனிவா ஐ.நா. மனித உரிமை கவுன்சிலில் முன்பு ஒரு பிரேரணையை முன் வைக்கப் போவதாக அறிவித்தன. அதனைத் தாங்கள் ஆதரிப்பதாகவும், தாங்கள் கொடுத்த அழுத்தத்தின் காரணமாகவே, அமெரிக்கா இத்தகைய முன்னெடுப்பைக் கையில் எடுத்தது என்றும் கூட்டமைப்பு மார் தட்டியது. இதன் பின்னரே, மஹிந்த அரசு அதிகாரப் பகிர்வு பேச்சில் இருந்து பின் வாங்கியது. இது அண்மைக் கால சரித்திரம்.

இது தவிர, வேறு ஒரு பிரச்சினையும் உள்ளது. அதிகார பகிர்வு குறித்து தமிழர் தரப்புகளுடன் தாங்கள் இருப்பதாக அரசு சார்பில் ராஜபக்ஷ தரப்பு கூறுவதற்கு வேறு ஒரு, பொருள் பொதிந்த அர்த்தம் உண்டு. இது எங்களது உள் நாட்டு விவகாரம். நாங்களே எங்களுக்குள் பேசி தீர்த்துக் கொள்கிறோம். இதற்கு இந்தியாவின்தயவும் அழுத்தமும் எங்களுக்கு தேவையில்லை என்றும் ராஜபக்ஷக்கள் கூறுவதாகவே இதன் பொருள். இந்த பொருளும் கூட்டமைப்புத் தலைமைக்குப் புரியாததல்ல. அப்போது வாளவிருந்துவிட்டு, இப்போது, இந்தியாவை அழைப்பதில் என்ன தார்மீக நியாயம் இருக்கிறது என்று தெரியவில்லை.

இது தவிர, இனப்பிரச்சினை விடயத்தில், இந்தியா, அமெரிக்கா என்று இரு நேச நாடுகளையும் மோதவிட்டு, தமிழர் தலைமைகள் அரசியல் முதல் எடுக்க முயல்வதாகவே கருத வேண்டி உள்ளது. காரணம், எப்போது, பதின்மூன்றுக்கு அப்பால் என்ற நிலைபாட்டை தமிழர் தலைமை எடுக்கிறதோ, அப்போதே இலங்கையின் மீதான இந்தியாவின் தார்மீக இறுக்கம் தளர்வு அடைந்து விட்டது. இது தவிர, கடந்த சில முறைகள் ஜெனிவாவில், அமெரிக்காவும் அதன் மேற்கத்திய உறவு நாடுகளின் நிலையை இந்தியா முற்றிலுமாக ஆதரிக்கவில்லை என்பதும் கண்கூடு.

இவை தவிர, கூட்டமைப்பின் நிலைபாடுகளை உள்நாட்டு அரசியல் கோணத்திலும் பார்க்க வேண்டும். அரசியல் தீர்வு மற்றும் போர்க் குற்றங்கள் விசாரணை என்ற இரு பிரச்சினைகளிலும், போருக்கு பிந்திய காலத்தில், கூட்டமைப்பு ராஜபக்ஷக்களை மட்டுமே குறை கூறி வந்துள்ளது. இதற்கு முந்தைய ரணில் ஆட்சி காலத்தில், ஏதோ, நாளை காலையிலேயே தமிழர் பிரச்சினைகளுக்கு விடிவு ஏற்பட்டு விடும் என்ற மாய தோற்றத்தை அவர்களே உருவாக்கி கொண்டார்கள். அதிலும் தாங்கள் மோசம் போய் விட்டோம் என்று இன்று வரை கூட்டமைப்பு ஏற்றுக் கொள்ளவில்லை. அது குறித்து, எந்த விளக்கமும் அளிக்கவில்லை. அல்லது தமிழ் மக்களிடம் மன்னிப்பும் கோரவில்லை.



**ஒரு முறைக்கு பல முறை**

இவை எல்லாம் போதாது என்று, தற்போது, இந்தக் கடித விவகாரத்தில், இந்திய அரசையும் பிரதமர் மோடியையும் தமிழர் தரப்பு இளப்பமாக நினைத்துச் செயல்படுகிறது, என்பதற்கு முத்தாய்ப்பு வைப்பது போல் ஒரு சம்பவம் அரங்கேறியுள்ளது.

அந்தக் கடிதத்தை இந்தியப் பிரதமருக்கு அனுப்பி வைக்கும் முகாந்திரமாக, தூதுவர் கோபால் பாக்லேயிடம் அளிப்பதற்கு முன்னரே, அதன் நகல், பத்திரிகையாளரின் தனி நபர் செய்தியாக அவரது ப்ளோக்கில் வெளிவந்துள்ளது. இது போதாது என்று, தலைநகர் கொழும்பில் உள்ள மேற்குலக நாடுகளின் தூதரகங்களுக்கும் இந்தக் கடித நகல் கசிந்துள்ளது.

இது கடிதத்தின் கடைசி நகலே என்று ஒரு செய்தி உலா வருகிறது. அதன் உண்மைத் தன்மை, அந்த இரண்டு கடித நகல்களும் ஒரு சுற்று வந்தால் மட்டுமே புரியும். அப்படி இருந்தாலும், கடிதத்தின் ஏதோ ஒரு நகல் ஒரு சுற்று சுற்றி வந்துள்ளது என்பது கூட, தமிழர் தரப்பு விசனப்பட வேண்யடிய விடயம். இதற்கு அப்பால், தமிழர் தரப்பை நம்பி, இந்தியா என்ன, அவர்கள் தற்போது அண்டி அரசியல் செய்யும், மேலை நாடுகள் கூட ஒரு முறைக்குப் பல முறை யோசனை செய்யும்.

சம்பந்தனின் தலைமை, கடந்த மூன்று, நான்கு தசாப்தங்களாகவே சர்வதேச சமூகத்துடன் கருத்தியல் அரசியலில் தொடர்ந்து ஈடுபட்டு வந்துள்ளது. இந்தியாவை பொறுத்த வரையில், கடந்த 1987 ஆம் ஆண்டின் இந்திய - இலங்கை ஒப்பந்தம் குறித்து பேச்சுவார்த்தை நடந்த போதும், அதற்கு முன்னரும், சம்பந்தன் அதனுடன் இணைந்து செயல்பட்டு வந்துள்ளார். எனவே, அவருக்கு, சர்வதேச அரசியலின் முறைகளும் முறைகேடுகளும் நன்றாகவே தெரியும்.

அந்த விதத்தில், இந்த கடிதம் தோற்றுவித்த பிரச்சினைகளும் சரி, கடைசியில் அது 'லீக்' செய்யப்பட்ட விதமும் சரி, அதில் கையெழுத்திட்ட அரசியல் தலைவர்கள் தங்களை கூட்டு சுயபரிசோதனை செய்து கொள்ளும் நிலைமைக்கு தள்ளி உள்ளது. ஆனால், இதுவே, முதலும் அல்ல. முடிவும் அல்ல.

போர் முடிந்த காலகட்டத்தில், அரசுடன் கூட்டமைப்பு தலைமைப் பேச்சுவார்த்தை நடத்திவந்த காலத்திலும் இது போன்று நடந்ததாகக் கூறப்பட்டது. அப்போது, பேச்சுவார்த்தை முழுமையாக வெளிநாடுகளில் வாழும் சில தமிழர் தரப்புகளுக்கு நேரடியாக ஒலிபரப்பப்பட்டது என்று கூறப்பட்டது. அதாவது, பேச்சுவார்த்தையில் பங்குபெற்ற ஒரு தமிழ் தலைவராவது, தனது கை தொலைபேசியை ஸ்விட்ச் - ஆன் செய்துவிட்டு, வெளிநாட்டில் உள்ளவர் பேச்சுவார்த்தைகளை நேரடியாக கேட்க வழிவகை செய்தார் அல்லது செய்தார்கள், என்ற எண்ணம் பரவத் துவங்கியது. அந்த ஒட்டு கேட்கும் கலாசாரத்தில் இருந்து இன்னமும் தமிழர் தரப்பு மீளவில்லை என்று நினைக்கும் போது, சோதனை மேல் வேதனையும் தோன்றுவது தவிர்க்க முடியாத விடயமாகி விட்டது!



# சிம்பாப்வே தொடருக்கான இலங்கை அணி அறிவிப்பு

இலங்கை – சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடரில் பங்கெடுக்கும் இலங்கை அணி விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அணியில், கடந்த ஆண்டு உயிரியல் பாதுகாப்பு விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டின் பேரில் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் விளையாடுவதற்கு ஒரு வருடத்தடையினைப் பெற்றிருந்த குசல் மெண்டிஸ் இடம்பெற்றிருக்கின்றார்.

குசல மெண்டிஸ் மீது விதிக்கப்பட்ட தடை பாதியிலேயே இந்த ஆண்டின் ஆரம்பத்தில் நீக்கப்பட்ட பின்னர் விளையாடும் முதல் தொடராக இத்தொடர் அமையவிருக்கிறது. 2021ஆம் ஆண்டுக்கான லங்கா பிறீமியர் லீக் தொடரில் கோல் கிளேடியேட்டர்ஸ் அணிக்காக விளையாடியிருந்த குசல் மெண்டிஸ், அந்தத் தொடரில் அதிக ஓட்டங்ளைப் பெற்ற வீரராகவும் திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.

தினேஷ் சந்திமால், கமிந்து மெண்டிஸ், நுவான் பிரதீப் வேகப்பந்துவீச்சாளர் சிரான் பெர்னாண்டோ, ஜெப்ரி வன்டர்சேய் மற்றும் சமிக்க குணசேகர ஆகியோரும் இலங்கையணியில் இடம்பிடித்துள்ளனர். அவிஷ்க பெர்னாண்டோ, அறிமுக வீரர் கமில் மிஷார மற்றும் ஜனித் லியனகே ஆகியோரும் சிம்பாப்வே அணிக்கு எதிரான இலங்கையின் ஒருநாள் குழாத்தில் பெயரிடப்பட்டிருந்தபோதும் அவர்களுக்கு கொவிட்-19 வைரஸ் தொற்று ஏற்பட்ட காரணத்தினால் இந்தத் தொடரில் ஆடுகின்ற வாய்ப்பினை இழந்துள்ளனர்.

இதேவேளை ஏற்கனவே இலங்கை ஒருநாள் அணியில் வாய்ப்புப்பெற்ற வேகப்பந்துவீச்சாளர்களான லஹிரு குமார மற்றும் கலன பெரேரா ஆகியோர் உடற்தகுதிப் பரிசோதனையில் சித்தியடையத் தவறியதனையடுத்து அவர்கள் இறுதிப்பட்டியலில் இடம்பெறவில்லை. ஹஸரங்க, குசல் ஜனித் பெரேரா ஆகியோர் உபாதையில் இருந்து குணமாகாத நிலையில் அவர்களும் இந்த அணியில் உள்ளடக்கப்படவில்லை. தனஞ்சய டி சில்வா, அண்மையில் பிறந்த குழந்தையோடு நேரம் செலவிட விடுமுறை பெற்றுள்ளமையால் அவரும் இந்த அணியில் பெயரிடப்படவில்லை.

இலங்கை அணி விவரம் – தசுன் ஷானக்க (அணித் தலைவர்), பத்தும் நிஸ்ஸங்க, மினோத் பானுக்க, தனஞ்சய டி சில்வா, சரித் அசலங்க, சமிக்க கருணாரட்ன, மகீஷ் தீக்ஷன, ஜெப்ரி வன்டர்சேய், நுவான் துஷார, ரமேஷ் மெண்டிஸ், பிரவீன் ஜயவிக்ரம, துஷ்மந்த சமீர, சமிக்க குணசேகர, தினேஷ் சந்திமால், குசல் மெண்டிஸ், நுவான் பிரதீப், சிரான் பெர்னாண்டோ, கமிந்து மெண்டிஸ்

மேலதிக வீரர்கள் – அஷேன் பண்டார, புலின தரங்க, நிமேஷ் விமுக்தி, அதைன் டேனியல், அசித பெர்னாண்டோ, விஷ்வ பெர்னாண்டோ

## ஆஸ்திரேலிய நுழைவு அனுமதிக்கு தவறான தகவல்கள் வழங்கினேன் என ஒப்புக்கொண்ட நோவக் ஜோகோவிச்



ஆஸ்திரேலிய நுழைவு அனுமதிக்கான விண்ணப்பப்படிவத்தில், தவறான தகவலை உள்ளடக்கியதாக உலகின் முதல்நிலை டென்னிஸ் வீரர் நோவக் ஜோகோவிச் ஒப்புக் கொண்டுள்ளார்.

ஆஸ்திரேலியாவிற்குள் கடந்த 6 ஆம் திகதி நுழைவதற்கு பூர்த்தி செய்யப்படவேண்டிய விண்ணப்பப் படிவத்தில், 14 நாள்களுக்கு முன்னராக தாம் எங்கும் பயணித்திருக்கவில்லை என ஜொக்கோவிச் குறிப்பிட்டிருந்தார். ஆயினும், அவர் இரண்டு வாரக்காலப்பகுதியில் சேர்பியாவிலும் ஸ்பெயினிலும் பயணங்களை மேற்கொண்டிருந்தமை தொடர்பாக சமுக வலைத்தளங்களில் ஆதாரங்கள் வெளியாகியிருந்தன. அதனையடுத்து, குறித்த விண்ணப்பப் படிவத்தில் தனது பயணங்கள்தொடர்பானபிரிவைநிரப்பியபோது, தமது முகவர் தவறிழைத்து விட்டார் என நோவக் ஜோகோவிச் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடருக்காக ஆஸ்திரேலி யாவுக்குச் சென்ற நோவக் ஜோகோவிச், கொரோனாத் தடுப்பூசிகளைச் செலுத்திக்கொண்டிராததாலும், அவ்வாறு தவிர்ப்பதற் கான உரிய மருத்துவச் சான்றிதழ்களைச் சமர்ப்பிக்காததாலும் அவரது விசாவை ஆஸ்திரேலிய அரசு ரத்துச் செய்திருந்தது. ஆயினும், அவர் சார்பில் நீதிமன்றில் தொடுக்கப்பட்ட வழக்கில், ஜோகோவிச்சின் விசாரத்தினை, நிறுத்தி நீதிமன்றம் உத்தரவு வழங்கியது. அதனையடுத்து, ஆஸ்திரேலிய அரசு மேன்முறையீட்டினைச் செய்துள்ளது.



## சிரேஷ்ட வீராங்கனைகளுக்கான தேசிய வலைப்பந்தாட்ட தொடர்

2021ஆம் ஆண்டுக்கான சிரேஷ்ட வீராங்கனைகளுக்குரிய தேசிய வலைப்பந்தாட்ட தொடர் இம்மாதம் 22, 23ஆம் திகதிகளில் திகன விளையாட்டுத் தொகுதியில் இடம்பெறவிருக்கின்றது.

முன்னதாக 2021ஆம் ஆண்டின் டிசெம்பர் மாதத்தில் இந்த வலைப்பந்தாட்டத்தொடரை நடத்துவதற்கு ஒழுங்கு செய்யப்பட்ட போதும் கொவிட்-19 வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக ஒத்தி வைக்கப்பட்டிருந்தது. தேசிய வலைப்பந்து சம்மேளனத்தினால் மீண்டும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இந்தத் தொடரில் நாடு முழுவதுமிருந்து 30 வெவ்வேறு அணிகள் பங்கெடுக்கவிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த ஆண்டின் செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள 2022 ஆம் ஆண்டுக்கான ஆசிய வலைப்பந்து சம்பியன்ஷிப் தொடரில்பங்கெடுக்கும் இலங்கை வலைப்பந்து அணியின் மேலதிக வீராங்கனைகளை தெரிவு செய்யும் ஒரு களமாகவும் இந்த தேசிய வலைப்பந்தாட்டத் தொடர் இருக்கும் எனவும் கருதப்படுகின்றது. இறுதியாக 2018ஆம் ஆண்டு சிங்கப்பூரில் நடைபெற்றிருந்த ஆசிய வலைப்பந்து சம்பியன்ஷிப் தொடரில், இலங்கை வலைப்பந்து அணி சம்பியன் பட்டம் வென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஐ.பி.எல். தொடரின் பிரதான அனுசரணையாளர் டாட்டா குழுமம் ஒப்பந்தத்தைக் கைப்பற்றியது

இந்தியன் பிறீமியர் லீக் (ஐ.பி.எல்) தொடரின் புதிய பிரதான அனுசரணையாளராக டாடா குழுமம் அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. ஐ.பி.எல். தொடரில் இந்த ஆண்டு நடைபெறவுள்ள 15 ஆவது பருவத்தில் கூடுதலாக இரு அணிகள் இணைத்துக் கொள்ளப்பட்டு 10 அணிகள் ஆடவுள்ளதால், வீரர்களைத் தெரிவு செய்வதற்காக இந்தப் பருவத்துக்கான ஏலம் மெகா ஏலமாக பெப்ரவரி மாதத்தில் இடம்பெறவுள்ளது.

2018ஆம் ஆண்டிலிருந்து ஐ.பி.எல். தொடரின் பிரதான அனுசரணையாளராக இருந்துவந்த விவோ நிறுவனத்தின் ஒப்பந்தம் நிறைவுபெற்றதையடுத்து இந்தியாவின் முன்னணி நிறுவனங்களில் ஒன்றான டாடா குழுமம் அந்த இடத்தைப் பிடித்துள்ளது. இதில் 2018 -2021 வரை ஐ.பி.எல். தொடரின் பிரதான அனுசரணையாளராக இருந்த விவோ நிறுவனம்.2200 கோடி ரூபாவை பிரதான அனுசரணையாளர் ஒப்பந்தத்தினூடாக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை (பி.சி.சி.ஐ.) க்கு வழங்கியது. எனினும், 2020ஆம் ஆண்டு இந்தியா – சீனா நாடுகளுக்கு இடையிலான எல்லை பிரச்சினை பூதாகரமாக வெடித்ததால், 2020 ஆம் ஆண்டு ஐ.பி.எல். பருவத்தில் மாத்திரம் விவோ நிறுவனம் பிரதான அனுசரணையாளராக செயல்படுவதில் இருந்து விலகி, மீண்டும் 2021ஆம் ஆண்டு பிரதான அனுசரணையாளராக இணைந்துகொண்டது. தற்போது, 2022 மற்றும் 2023ஆம் ஆண்டு ஐ.பி.எல். தொடர்களின் பிரதான அனுசரணை உரிமத்தை டாடா குழுமம் பெற்றிருப்பதை ஐ.பி.எல். நிர்வாகத்தலைவர் பிரிஜேஷ் படேல் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார். இந்த உரிமம் மாற்ற நடவடிக்கையின் மூலம் 2022-23 காலகட்டத்துக்காக பி.சி.சி.ஐ.க்கு 1,124 கோடி ரூபா வருவாய் கிடைக்கின்றமை குறிப்பிடத்தக்கது.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

**அங்கம் - 251**

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**645.கந்தசாமி காணாமல் போன விடயத்திற்கு ஈரோஸ் குழுவினரா பொறுப்பு?**

நடந்த பின்னணிகளைப் பார்க்கும் போது அவர்கள் தான் பொறுப்பாகிறார்கள். வழமைபோல அது மறுக்கப்பட்டது.

அன்றும் எங்களது விடுதலைப் போராட்டத்துக்கு சர்வதேச ஆதரவு வேண்டியிருந்தது. இன்றும் அதைத்தான் நம்பியிருக்கின்றோம். அவரது கடத்தலின் பின் சர்வதேசக் கண்டனங்கள் பல எழுந்தன. தமிழ் மக்களின் விடுதலைக்கு சர்வ



பிறையன் செனிவிரத்ன

தேசத்தில் ஏற்படுத்திய தாக்கங்களுக்காக தெரிந்தெடுத்தவற்றை தருகிறேன்.

டேவிட் செல்போர்ன் (David Selbourne)! தமிழ் விடுதலைக்குப் பரிச்சியமானவர். ஒக்ஸ்போட்டில் (Oxford) அமைந்த ரஸ்கின் கலாசாலையின் முன்னாள் அரசியல்துறைப் பேராசிரியர் பிரித்தானியாவின் பிரசித்தமான பத்திரிகைகளில் மனித உரிமை மீறல்கள் பற்றியும் தமிழ் மக்கள் போராட்டத்தைப் பற்றியும் அதிகம் எழுதியவர். அவரின் வார்த்தைகளில் வந்தவை இவை:-

"ஸ்ரீலங்காவைப் பற்றி நான் கேள்விப்பட்ட கொடூரங்களில் கந்தசாமி காணாமலாக்கப்பட்டதும் – அநேகமாக இறந்திருப்பார் என்பதும் – என்னைப் பாதித்தது போல வேறு ஒன்றும் அவ்வளவு தாக்கம் தரவில்லை. மனிதர்களில் அவர் மிகச் சிறந்தவர் மட்டுமல்லர். நேர்மையானவர். உங்களிடையே இருக்கும் பிரபாகரன் மற்றும் அவர் போன்ற தகரப்பேணி (Tin pot heroes) ஹீரோக்களுக்களில் இருபது பேருக்கு அவர் சமம். இந்தத் தகரபேணி ஹீரோக்கள் தமிழ் மக்களை ஒரு நீண்ட கால அரசியல், தார்மீக அழிவுகளுக்குத் தான் நடத்திச் செல்கிறார்கள். நடைபெறும் கொடூரங்களும், அவற்றுக்கு எதிரான, அதற்கு ஆதரவாக நிறைவேற்றப்பட்டு வெளியிடப்படும் பிரயோசனமில்லாத மகாநாட்டு தீர்மானங்களே இந்த உண்மைகளை அவர்கள் பார்ப்பதைத் தடுக்கின்றன.

ஈரோஸ் இதைச் செய்யும் என்பதும், அதைச் செய்துவிட்டு குற்ற உணர்வு காட்டாது, அதற்காக பலமான கண்டனங்களும் தமிழ் மக்களிடமிருந்து எழாதது தமிழ் மக்களின் போராட்டத்தையே அழிவிற்குத் தள்ளுகிறது. இதனை நான் கண்டிக்கத் தேவையில்லை. ஏனெனில் இது தானாகவே கண்டித்துக் கொள்கிறது. நீதிக்கான தார்மீகப் போராட்டம் என்றளவிலே தமிழர் போராட்டம் அந்த தார்மீக வலிவுகளை இழந்து விட்டது. போராட்டம் தொடர்ந்து கொண்டேயிருந்தாலும், எனது எண்ணத்தில், தமிழீழமோ, உண்மையான சமஷ்டியோ, அதிகாரப் பரவலோ அல்லது ஏதாவது நியாயமான தீர்வோ தமிழ் மக்களுக்கு இந்த நூற்றாண்டிலாவது கிடைக்கும் என நாம் நம்பவில்லை. இதை நான் முன்னர் வெளிப்படையாகச் சொல்ல விரும்பவில்லை. ஏனெனில் அது கொழும்பில் இருந்து வரும் அக்கிரமங்களுக்கு நியாயம் கற்பித்துவிடும் என்பதாலேயே. ஆனால் கந்தசாமி காணாமலாக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட போது இதனைச் சொல்லாது விட்டால் அது சுத்த கோழைத்தனமாகும்.

"நீங்கள் செய்யக் கூடியவற்றைச் செய்யலாம். அவை தார்மீகத்திற்காகச் செய்யத்தான் வேண்டும். ஆனால் உண்மை என்னவெனில் நீங்கள் செய்பவை எல்லாம் எந்த மாற்றங்களையும் தரப்போவதில்லை. ஏனெனில், அவர்களின் போராட்டத்தின் தார்மீகத்தை தமிழ் மக்கள் இழந்து விட்டார்கள். அதனால் தங்களது அரசியல் போராட்டத்திலும் தோற்றுப் போவார்கள். சில கொரில்லா போர் முனை வெற்றிகளை ஈட்டியிருந்தாலும், அதைப் போல மேலும் சிலவற்றை அவர்கள் வரும் பத்து (10) வருடங்களுக்கு வெற்றிகளாக ஈட்டினாலும், அவற்றினிடையே சிங்கள மக்களைத் தாக்கியும், இந்தியப் படைகள் தமிழ் மக்களைத் தாக்கியும் அழிவுகளும் நடக்கும். தார்மீக தகுதியும் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்தவர்களுமான தலைவர்களைத் தமிழர்கள் பெறும் வரை அவரர்கள் எது விதத்திலும் முன்னேறப்போவதில்லை. அவர்களது போராட்டம் பல நிலைகளில் தைரியமானது. ஆனால் அது அவர்கள் தாங்கள் எங்கு நிற்கிறார்கள் என நினைக்கிறார்களோ அந்த நிலையில் வைக்கவில்லை. ஐந்து வருடங்களுக்கு முன்னிருந்த இடத்தில்தான் இருக்கிறார்கள். அவர்கள் எதிரிகள் அவர்களை விட திறமையான சாணக்கியசாலிகள். ஆனால் கந்தசாமி போன்ற ஒருவரைக் கடத்திக் காணாமலாக்குவது என்பது என்ன? எவ்வளவு கீழ்த்தரமான மிருகத்தனம்? இதைச் செய்த இவர்கள் டாக்டர் ராஜசுந்தரத்தை வெலிக்கடையில் கொன்ற குடிகார குண்டர்களிலிருந்து வேறுபட்டவர்களல்லர்."

- இதனை அவர் தனிப்பட்ட கடிதமாக கந்தசாமியுடன் பணியாற்றியவர்களுக்கு எழுதியிருந்து பின் பொதுவாக்கப்பட்டது.

அடுத்தவர்கள் போல சீகாட் (Paul Sieghart) டும் தமிழர் விடுதலையுடன் ஈடுபட்ட டாக்டர் பிறையன் செனிவிரத்தினவும் (Dr. Brian Senewiratne).


**646.அவர்கள் என்ன அபிப்பிராயம் சொல்லியிருந்தார்கள்?**

போல் சீகாட் பிரசித்தி பெற்ற ஆங்கில சர்வதேச சட்டத்தரணி. சர்வதேச மனித உரிமைகள் பற்றி எவ்வளவோ புத்தகங்களும் கட்டுரைகளும் எழுதியவர். ஐரோப்பிய மனித உரிமை நிதியத்தின் தலைவராகவும் சர்வதேச நீதியரசர்களின் பிரித்தானியாவின் கிளைத் தலைவராகவும் 1984 இல் ஸ்ரீலங்கா வந்து அறிக்கைகள் தந்தவர் அவர்.

"ஈரோஸ் பற்றி நான் அதிகம் அறிந்திருக்கவில்லை. அவர்களுக்கு என்னிடமிருந்து ஒரு செய்தி உண்டு. நீங்கள் உங்கள் மக்களின் விடுதலைக்கு எதையாவது செய்திருந்தீர்களானால் அதை நீங்களாகவே இப்போது எறிந்து விட்டீர்கள். இலங்கைத்தீவிற்கு வெளியேயுள்ள சர்வதேசத்தின் ஆதரவின்றி தமிழ் விடுதலை என்பது தோற்றுப் போன ஒன்று. அப்படியான ஆதரவுகள் பிரபலமான கந்தசாமி போன்ற மனிதர்கள் மூலமாகவே வந்து சேர்கின்றன. அப்படியான ஒருவர் தாக்கப்பட்டாலோ காயப்படுத்தப்பட்டாலோ வரக்கூடிய ஆதரவுகள் முடங்கிப் போகின்றன. அவற்றுக்கு நீங்களே பொறுப்பாளிகள் ஆகிறீர்கள். உங்கள் மக்களின் விடுதலைக்காக நீங்கள் ஏதாவது உண்மையான அனுதாபம் காட்டினால் அவரை உடனடியாக விடுவியுங்கள்." – என்றார் அவர்.

டாக்டர் பிறையன் செனிவிரத்னாவைப் பற்றி தமிழ் மக்களுக்கு அறிமுகம் தேவையில்லை. தமிழருக்கு ஆதரவாக குரல் கொடுக்கும் இந்த சிங்களவர் நாடு கடந்த தமிழீழ அரசின் கௌரவ மேலவை உறுப்பினராக நியமிக்கப்பட்டவர். அவருடைய பார்வையில் –

"கந்தசாமியின் இறப்பினால் தோற்றுப் போனவர்கள் தமிழ் மக்களே. சர்வதேச நிதி நிறுவனங்களின் பணிகள் உறையும். அவரின் தராதரத்தில் இன்னுமொரு மனிதரைக் கண்டறியாதவரையில் நிதி நிறுவனங்கள் அவர்களை நாடப் போவதில்லை. அவருக்கு நடந்தளவில் இன்னொருவர் இதைப் பொறுப்பெடுக்கப் போவதுமில்லை. அவர் தனது மரணத்



டேவிட் செல்போர்ன்

துக்கு முன்னால் கூறியமாதிரி ஈரோஸ் அல்லது விடுதலை இயக்கங்கள் எவையாயினும் தங்களோடு இந்தப் புனர்வாழ்வு அமைப்புகளுக்கு நிதி பொழிவார்கள் என நம்பினால் அவர்கள் கனவுலகத்தில்தான் வாழ்கிறார்கள். புனர்வாழ்வுத் திட்டங்களுக்கு நடந்த அழிவிலும் பார்க்க தமிழ் விடுதலைப் போராட்டத்துக்குத்தான் இவரது மரணம் பேரடியாக விழுந்தது" – என சர்வதேசத்தில் விடுதலைக்கு ஆதரவாகக் குரல் கொடுத்து வந்தது போல சீகாட்டினதும் டேவிட் செல்போனினதும் அபிப்பிராயங்களை நினைவுபடுத்துகிறார் அவர்.

"கந்தசாமியின் கொலை என்னைப் பாதிக்கவில்லை என நான் சொன்னால் அது பச்சைப் பொய்யாகும். நான் ஆர்வமாக தன்னிச்சையாக ஆதரவு அளித்து வந்த தமிழ் விடுதலைப் போராட்டத்திலேயே ஒரு நம்பிக்கையீனத்தையும் எதனை ஆதரிக்கிறேன் என்ற கேள்விகளையும் அது எழுப்புகிறது. நான் இன்னும் தமிழ்ப் போராட்டத்தோடு நிற்கிறேன் என்றால் அது ஸ்ரீலங்கா அரசாங்கத்திடமிருந்து தமிழ் மக்கள் அனுபவித்த அட்டூழியங்களுக்கு அவர்களுக்கு இன்னும் விமோசனம் கிட்டவில்லை என்பதினாலேயே.

புலம்பெயரில் வாழும் தமிழ் மக்கள் கூட தம்மிடையே தினமும் நடைபெறும் இந்த மாதிரியான கொலைகளைக் கண்டிக்காமல் விடுவது அவர்களது நம்பகத் தன்மையையே கேள்விக்குறியாக்குகிறது. ஈழத்தில் இருக்கும் தமிழ் மக்களின் மௌனத்தை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. அவர்கள் வாழும் எதேச்சதிகாரத்தில் அவர்கள் சாப்பிடத்தான் வாயைத் திறக்கிறார்கள் என சரியாகவே சொல்லப்படுகிறது. ஆனால் புலம்பெயரில் வாழும் தமிழர்களுக்கு அப்படியான கட்டுப்பாடுகள் என்ன இருக்கின்றன?

ஆக புலம் பெயர் தமிழ் மக்கள் ஆவலாக சிங்கள ஏகாதிபத்தியம், அவர்களது படைகள், இன்று கட்டுக்கடங்காமலிருக்கும் இந்திய சமாதான படைகள் செய்யும் அட்டூழியங்களைத்தான் கண்டிக்க விரும்புகிறார்களா? அல்லது அவர்களைப் போலவே அவர்களது தமிழ் குண்டர்கள் செய்யும் அட்டூழியங்களையும் கண்டிக்கும் எண்ணம் உண்டா?

ஈழமும் கொழும்பிலிருந்து வரும் குண்டர்களைப் போலான காட்டுமிராண்டிகளால்தான் நடத்தப் பெறுமானால் என்ன வித்தியாசத்தைக் காணலாம்? ஈழத்தில் கூட, வேற்றுமைக் கருத்துக்கள் பேசித் தீர்க்கப்படாமல், துவக்குகளினால் தான் தீர்வு தேடப்படுமானால் அதில் என்ன நன்மை? ஈழத்தில் வாழ்வது நன்மையானது என்றால் அது தமிழின் ஆன்மா. அதன் கலாச்சாரம், மரபுகளைப் பிரதிபலித்தல் வேண்டும். ஆனால் அங்கு நடப்பது அதுவல்ல. நாங்கள் போடும் கூப்பாடு – 'நாங்கள் தமிழ் தேசத்துக்காகப் போராடுகிறோம்' என்பதே. நாங்கள் அதற்கும் மேலானதுக்காகவும் போராடுகின்றோம். அந்த போராட்டம் தமிழின் ஆன்மா. அதன் மரபுகள், கலாச்சாரம் என்பதற்காகவும் அது ஒரு மனிதாபிமானம் நிறைந்த நீதியான ஈழமாகவும் அமைய வேண்டும் என்பதற்காகவும் தான்.

இப்படியான கொலைகளை செய்பவர்களிடம் இவற்றின் மூலம் நீங்கள் எங்களை எங்கே கொண்டு செல்கிறீர்கள் எனக் கேட்க வேண்டும்.

இந்த மனிதனின் இழப்பை நினைவு கூரத் தேவையில்லை எனத்தான் மண்ணின் மைந்தர்கள் புலம்பெயர் அமைப்பாளர்களுக்குத் தெரிவித்தார்கள். எனக்குக் கூட நேரடியாகத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் மெல்போனிலும் சிட்னியிலும் நினைவுக் கூட்டங்களை ஏற்பாடு செய்தோம். லண்டனிலும் நினைவுகள் நடந்தன.

– வளரும் –



போல் சீகாட்

# மோடிக்கான கடிதத்தில் அனைத்திலுமே மாற்றம்

## சுமந்திரன் தெரிவிப்பு



வவுனியா, ஜனவரி 14

இந்தியப் பிரதமருக்கு தமிழ்க் கட்சிகளால் அனுப்பப்படவுள்ள கடிதவிடயத்தில் தமிழரசுக்கட்சி ஈடுபடத்தொடங்கியதில் இருந்து அதன் பொருள், அதனுடைய நோக்கம், அது எதனைக் கோருகின்றது, அதன் தலையங்கம் அனைத்தையும் மாற்றியமைத்திருக்கின்றோம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எ.சுமந்திரன் தெரிவித்தார்.

வவுனியாவிற்கு புதன் விஜயம் செய்த அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்–

உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக் காலம் நீடிக்கப்பட்டமை ஒரு ஜனநாயக விரோதச் செயல். அதை முழுமையாக எதிர்க்கின்றோம். உள்ளூராட்சி மன்றங்களுக்கு நான்கு வருடத்திற்கு ஒரு தடவை தேர்தல் நடாத்தப்படவேண்டும். அவசர தேவைகளுக்காக அதனை நீடிப்பதற்கான அதிகாரம் அரசுக்கு இருந்தாலும் இப்போது செய்யப்பட்டிருக்கும் நீடிப்பு, எந்த வித காரணமும் இன்றி செய்யப்பட்டுள்ளது. அரசாங்கக் கட்சி தேர்தலுக்கு முகம்கொடுக்க திராணியில்லாமல் இதனை நீடித்திருக்கிறார்கள்.

ராஜபக்ஷ சகோதரர்களின் ஆட்சி நீடிக்கப்பட முடியாது. அது முடிவிற்கு கொண்டு வரப்படவேண்டும் என்று நாங்கள் ஏற்கனவே சொல்லியிருக்கின்றோம். அவர்களுக்கு மக்கள் மத்தியிலே இருந்த செல்வாக்கு இப்போது பூச்சியமாகிவிட்டது. நாடு பொருளாதாரத்தை நிர்வகிக்க முடியாமல் சிக்கலை எதிர்நோக்கியுள்ளது. அதனாலே மின்சாரத. தட்டுப்பாடு, அத்தியவசிய பொருள்களின் விலைஏற்றம் போன்ற விளைவுகளைச் சந்திக்கின்றோம். நாட்டிலே பஞ்சம் ஏற்படும் என்று நாங்கள் முன்னரே சொல்லியிருந்தோம். அது தற்போது நிகழத் தொடங்கியிருக்கிறது.

எனவே நாட்டை மோசமான நிலைக்கு கொண்டு வந்த இந்த அரசு பதவி விலக வேண்டும் என்பதில் எமக்கு மாற்றுக் கருத்து கிடையாது. இதேவேளை இந்த அரசை நீக்கிவிட்டு யார் பதவிக்கு வருவார்கள் என்ற விடயத்தையும் நாம் அவதானிக்க வேண்டும். அந்த விடயத்தில் கடந்த கால படிப்பினைகளையும் மனதிலல் வைத்து நாங்கள் செயற்படுவோம். எதிரணிகள் ஒன்று சேர்ந்து செயற்பட்டால் அது தொடர்பாக தக்கநேரத்தில் சரியான முடிவுகளை எடுப்போம்.

இந்தியப் பிரதமருக்கான கடிதத்தை கையளிப்பதற்கு அதனை கைச்சாத்திட்டவர்கள் செல்கின்றார்கள். என்னையும் வருமாறு அழைத்துள்ளார்கள். அந்தக் கடிதம் 13 ஆம் திருத்தத்தை அமுல்படுத்தச் சொல்லி கோரிக்கை விடும் கடிதம் என்று கூறுவது தவறு. அதிலே தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகள் என்ன, இலங்கை - இந்திய ஒப்பந்தத்திற்கு பிறகு இலங்கையிலே இடம்பெற்றிருக்க கூடிய முன்னெடுப்புக்கள் என்ன, இலங்கை அரசுகள் இந்தியாவிற்கு கொடுத்திருக்கும் வாக்குறுதிகள் என்ன என்பன தெளிவாக சொல்லப்பட்டிருக்கின்றன.

அதனடிப்படையில் 13 ஆம் திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தவேண்டும். அத்தோடு நிற்காமல் அதற்கும் அப்பால் சென்று, ஓர் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வை நாங்கள் நிறைவேற்றுவோம் என்று இலங்கைஅரசு, இந்தியா உட்பட உலகநாடுகளுக்கு தொடர்ச்சியாக வாக்குறுதி வழங்கியிருக்கின்றார்கள். அதைத்தான் இந்த கடிதம் கோருகின்றது. முதலில் 13 ஆம் திருத்தத்தை கோரும் கடிதமாகவே அந்த முயற்சி முன்னெடுக்கப்பட்டது. அந்த வேளையில் இலங்கை தழிரசுக்கட்சி அந்தமுயற்சியில் ஈடுபட்டிருக்கவில்லை.

தமிழரசுக்கட்சி அதில் ஈடுபட ஆரம்பித்த போது 13 ஆம் திருத்தத்தை நடைமுறைப் படுத்துவது, தமிழ்மக்களின் அபிலாசை அல்ல என்ற எங்களுடைய தெளிவான நிலைப்பாட்டை சொல்லியிருக்கின்றோம். அது ஓர் அர்த்தமற்ற அதிகாரப்பகிர்வு முறை. மத்தியஅரசு அந்த அதிகாரங்களை மீளப்பெற்றுக்கொள்ளலாம். மீளப்பெற்றுக்கொண்டுள்ளது. ஆகையால் ஒற்றையாட்சி அமைப்பிற்குள்ளே வழங்கப்படும் அதிகாரப்பகிர்வான 13வது திருத்தம் பயனற்றது என்பது எமது நிலைப்பாடு. ஆனால் அதைக்கூட இலங்கை அரசு முழுமையாக நிறைவேற்றாத காரணத்தினால் அதை நிறைவேற்றி அதற்கும் அப்பால் சென்று கொடுத்த அதிகாரங்களை மீளப்பெறமுடியாத ஒரு முறை வேண்டும் என்று இந்த கடிதம் கோருகின்றது.

எமது மக்கள் சர்வதேச சட்டத்தின் கீழே ஒரு மக்கள் எனும் ஸ்தானத்தை பெற்றவர்கள். எனவே சுயநிர்ணய உரிமை எங்களுக்கு உண்டு. அதனை உள்நாட்டிலே பிரயோகிப்பதற்கு இணக்கம் தெரிவித்துள்ளோம். அந்தவகையில் சமஷ்டி கட்டமைப்பிலான அதிகாரப்பகிர்வு முறை தான் உகந்தது என்பதை இந்த கடிதம் எடுத்துச்சொல்கின்றது. தமிழரசுக்கட்சி அந்த கடிதத்தயாரிப்பில் ஈடுபடத்தொடங்கியதில் இருந்து அதன் பொருள், அதனுடைய நோக்கம், அது எதனைக் கோருகின்றது, அதன் தலையங்கம் அனைத்தையும் மாற்றியமைத்திருக்கின்றோம். - என்றார்.

# ஈ.எஸ்.பிக்கு கலாநிதி பட்டம்

தொழிலதிபர், கல்விக்காருண்யன் லயன் ஈ.எஸ்.பி.நாகரத்தினம் அவர்களுக்கு கொழும்பில் இயங்கும் பூகோள சமாதானப் பல்கலைக்கழகத்தினால் (Global Peace University) மனிதநேயம் மற்றும் சமூக சேவைகளுக்காக கலாநிதி பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

இக்கலாநிதிபட்டமானது கொழும்பு பல்கலைக்கழகத்தின் கல்வியியல் பீடத்தின் முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் திரு.சந்திரசேகரம் அவர்களால் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.


இந்தப் பட்டம் கொழும்பு பல்கைக்கழகத்தினால் அவருக்கு வழங்கப்பட்டதாக நேற்றைய காலைக்கதிர் மாலை இதழில் தவறாகச் செய்தி பிரசுரமாகியிருந்தது.

காரைநகரினை சொந்த இடமாக கொண்ட பிரபல தொழிலதிபர் கல்விகாருண்யன் ஈ.எஸ்.பி. நாகரத்தினம் வடபகுதியில் கல்வி, விளையாட்டு துறைக்கு தன்னாலான பல்வேறு சேவைகளை ஆற்றி வருகின்றமையோடு இந்து ஆலயங்களுக்கும் தன்னாலான உதவிகளை வழங்கி வரும் நிலையில்இந்தக் கலாநிதி பட்டம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# பிரபாகரனே என்னைத் தோற்கடித்தார்!

## ஐ.தே.க. தலைவர் ரணில் ஆதங்கம்



2005 இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது பிரபாகரன்தான் என்னைத் தோற்கடிக்க வைத்தார்.

– இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ரணில் விக்கிரமசிங்கவால் ஏன் இன்னும் ஜனாதிபதியாக முடியாமல் உள்ளது என 'சிரச' ஊடகத்தால் எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:–

நான் இரண்டு தடவைகள் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டுள்ளேன். 1994இல் சந்திரிகா மீது குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. அதனால் முடிவு மாறியது.

அதன்பின்னர் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் என்னைத் தோற்கடிப்பதற்குத் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனே தீவிரமாகச் செயற்பட்டார்.

அதன்பின்னர் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தல்களில் பொதுவேட்பாளர்கள் தான் களமிறங்கினர்.

இனிவரும் ஜனாதிபதித் தேர்தல்களில் போட்டியிடுவதா என்பது பற்றி நான் இன்னும் தீர்மானிக்கவில்லை. நபர்களை விடவும் கொள்கைகளே முக்கியம் – என்றார்.

# பொங்கல் என்பது வெறும் பண்டிகை மட்டுல்ல; அது தமிழ்ப் பண்பாட்டைக் கட்டிக்காப்பதற்கான வேட்கை

## வாழ்த்துச் செய்தியில் ஐங்கரநேசன் விளக்கம்



தமிழ் மக்கள் தங்கள் வாழ்வில் எத்தனையோ பண்டிகைகளைக் கொண்டாடி வருகின்றனர். இவற்றுள் பெரும்பாலானவை மதம் சார்ந்தவையாகவும், அவர்களிடையே ஏற்றத்தாழ்வுகளை வெளிப்படுத்துபவையாகவும் அமைந்துள்ளன. ஆனால், தைப்பொங்கல் மட்டும் சாதி, மத, பொருளாதார பேதங்களைக் கடந்து ஒட்டுமொத்தத் தமிழர்களுக்கும் பொதுவான பண்டிகையாகக் கொண்டாடப்படுகிறது. இது வெறும் பண்டிகை அல்ல, தமிழ்ப் பண்பாட்டைக் கட்டிக்காப்பதற்கான வேட்கை என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் பொங்கல் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

பொங்கல் வாழ்த்துச் செய்தியில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

தமிழ்மக்கள் இயற்கையைக் கடவுளாகப் பூசித்த தொல்வழிபாட்டுப் பண்பாட்டைக் கொண்டிருந்தவர்கள். அதன் தொடர்ச்சியாகவே மாரி மழை ஓய்ந்து கோடை ஆரம்பிக்கும்போது முதல் அறுவடையில் பொங்கல் செய்து சூரியனுக்குப் படைக்கும் பண்பாட்டு வெளிப்படுத்துகையாகக் தைப்பொங்கல் அமைந்துள்ளது. தமிழ் மக்கள் தங்களைப் போன்றே இயற்கையை நேசிக்கும் பண்பாட்டு மரபைக் கொண்டிருந்தவர்கள். அதன் தொடர்ச்சியாகவே அவர்களோடு உணவு உற்பத்தியில் உழைத்த காளைகளுக்கும் பொங்கல் செய்து படைக்கும் பண்பாட்டு நீட்சியாகப் பட்டிப்பொங்கலைக் கொண்டாடுகிறார்கள். தமிழ் மக்கள் புறமணம் புரியும் பண்பாட்டு உறவைக் கொண்டுள்ளவர்கள். கிராமங்களை இணைப்பதற்கு வீதிகள் இல்லாத அக்காலப்பகுதியில் தைபிறந்தால் வழிபிறக்கும் என்று மாரி மழை ஓயும்வரை காத்திருந்து பாதைகள் தெரிய ஆரம்பித்ததும் அயற் கிராமங்களுக்கு மாப்பிள்ளை தேடிச் செல்வர்.

ஆனால், இன்று நயத்தகு பண்பாட்டுக்குச் சொந்தக்காரர்களான தமிழ் மக்கள் இந்தத் தையிலாவது பௌத்த - சிங்களப் பண்பாட்டு மேலாதிக்கத்தில் இருந்து விடுபட வழிபிறக்காதா என்று அங்கலாய்த்திருக்கின்றனர். பொங்கல் வாழ்த்துச் செய்திகளை அடுத்தவர்களுக்குப் பரிமாறும் இவ்வேளையில் தமிழ் மக்களின் சுதந்திரமானதும் சுபீட்சமானதுமான வாழ்வுக்கு வழிபிறக்கச் செய்ய இயற்கை என்ற பேரிறைவனை வேண்டி நிற்போமாக - என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# அடுத்த ஜனாதிபதி சஜித்!

## அடித்துக் கூறுகின்றார் திஸ்ஸ

அடுத்த ஜனாதிபதி சஜித் பிரேமதாஸவே. இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. - இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி. ஊடகங்களிடம் தெரிவித்தார்.

மைத்திரிபால சிறிசேன அல்லது ரணில் விக்கிரமசிங்க எதிர்க்கட்சித் தலைவராகுவதற்கான சாத்தியம் உள்ளது எனக் கூறப்படுகின்றதே என்ற கேள்விக்கு,

சஜித் பிரேமதாஸவே எமது எதிர்க்கட்சித் தலைவர். நாம்தான் தற்போதைய நாடாளுமன்றத்தில் இரண்டா வது பெரிய கட்சி. எனவே, எதிர்க்கட்சித் தலைவர் பதவி யைச் சவாலுக்குட்படுத்த முடியாது. அடுத்த ஜனாதிபதியும் அவர்தான். இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை – என்று பதிலளித்தார் திஸ்ஸ அத்தநாயக்க.

# 1,400 குடும்பத்தவருக்கு பொங்கல் உபகரணங்கள்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஜன.14

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் மற்றும் வடமாகணசபையின் முன்னாள் உறுப்பினர் சந்திரலிங்கம் சுகிர்தன் ஆகியோரின் 'பகிர்ந்து உண்போம் - 2022' என்ற எண்ணக்கருவின் அடிப்படையில் வடக்கு, கிழக்கில் 1,400 பேருக்கு பொங்கல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

தாயகத்து நன்கொடையாளர்கள் மற்றும் புலம் பெயர் தமிழர்களின் உதவியுடன் வடக்கு,கிழக்கு மற்றும் மலையகத்தில் பொருளாதாரத்தில் நலிவுற்ற ஆயிரத்து 400இற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு பொங்கல் பானைகளுடன் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

2022இல் தற்போதைய அரசின் பொருளாதாரக் கொள்கையால் எமது மக்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகளுக்கு மத்தியில் நம்பிக்கையோடு தைத்திருநாளை இன்று கொண்டாட அனைவருக்கும் இருப்பதைப் பகிர்ந்து இனத்தின் இருப்பினை நிலைநிறுத்தும் முயற்சியாக தாயகம் எங்கும் இளைஞர்களால் இந்த முயற்சி முன்னெடுக்கப்பட்டுவருகின்றது.